# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

## சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
2022 - 2023

## மானியக் கோரிக்கை எண்.15


# சிவ. வீ. மெய்யநாதன்

சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத்துறை
மற்றும் இளைஞர் நலன்,
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

# அட்டவணை

## சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை


| வ. எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு மாநில செயல் திட்டம் (TNSAPCC) | 15 |
| 3. | தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனம் | 35 |
| 4. | கவனம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்கள் மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்கள் | 40 |
| 4.1 | நிலையான வளர்ச்சி இலக்கு–13: காலநிலை தொடர்பான நடவடிக்கைகள் | 41 |
| 4.2 | காலநிலை மாற்றத் தகவமைப்பும், தணிப்பும் | 45 |
| 4.3 | கடலோர மண்டல மேலாண்மை | 57 |
| 4.4 | தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை | 78 |
| 4.5 | தொழில்நுட்ப செயல்பாடுகள் – புவியியல் தகவல் அமைப்பு | 79 |

| | | |
|---|---|---|
| 4.6 | சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் திறன் உருவாக்கம் | 81 |
| 5. | புது முயற்சிகள் | 87 |

# அட்டவணை

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்


| வ. எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 109 |
| 2 | இசைவாணை வழங்குதல் | 118 |
| 3 | நீர், காற்று மற்றும் ஒலி தர கண்காணிப்பு | 128 |
| 4 | கழிவு மேலாண்மை கண்காணிப்பு | 147 |
| 5 | சட்ட செயலாக்க அமைப்பு | 182 |
| 6 | இதர செயல்பாடுகள் | 184 |
| 7 | 2021-2022-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் | 188 |
| 8 | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 194 |

# சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு

(குறள் 737)

ஊற்றுநீர் அதாவது நிலத்தடிநீர் மற்றும் மழைநீர் ஆகிய இருவகை நீர்வளமும் அதற்கு தக்கவாறு அமைந்த மலையும் அந்த மலையிலிருந்து வரும் நீர் வளமும் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு வித்திடும் என பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர் மொழிந்துள்ளார்.

## 1 . முன்னுரை

மக்கள் நலமாகவும் வளமாகவும் வாழ்ந்திட வேண்டும் என்பதை உறுதி செய்ய, தூய்மையான சுற்றுச்சூழல் அவசியமாகும். நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயம், வனம் மற்றும் மீன்வளம் ஆகியவற்றின் சூழல் அமைப்பு முக்கியமானதாக விளங்குகிறது.

மக்கள் சார்ந்திருக்கும் நீர், காற்று, மற்றும் நிலம் ஆகியவற்றை சீர்படுத்துவதிலும், தீவிர வானிலை மாற்ற நிகழ்வுகள் மற்றும் காலநிலை மாற்றத்திற்குரிய தாக்கங்களைக் குறைப்பதிலும், சூழல் அமைப்புகள் முக்கியமான அம்சமாக விளங்கும். எனினும், இன்றியமையாத இயற்கை வளங்களின் செறிவும், செயல்பாடும் அதிகமான சமரசத்திற்கு உள்ளாகின்றன. இதனால், சூழல் சமநிலை மீண்டெழும் வேகத்தைவிட சிதைவடையும் வேகம் மிகுந்துள்ளது. இதனை உணர்ந்த அரசு, சுற்றுச்சூழல் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு உகந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

உலகெங்கிலும் காலநிலை மாற்றம் என்பது மக்களுக்கும் இயற்கைக்கும், இன்றைய நிலையில் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தி, ஒரு மிகப்பெரிய அறைகூவலாக விளங்குவதோடு, குறிப்பாக வளரும் நாடுகளையும் மிகவும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. பல நாடுகள் காலநிலை மாற்றத்தால்

பாதிப்புக்குள்ளாவதோடு, அதே அளவில் வளர்ச்சிப் பாதை மற்றும் பொருளாதார வளர்ச்சியிலும் காலநிலை மாற்றம் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

சுமார் 1.3 லட்சம் சதுரகிலோ மீட்டர் பரப்பளவில், 38 மாவட்டங்களை உள்ளடக்கி, விவசாயப் பொருளாதார நிலையில் இரண்டாம் இடத்திலுள்ள, 1076 கி.மீ நீளமுடைய சிறந்த கடற்கரையைக் கொண்டுள்ள தமிழ்நாடு, பல்வேறு இயற்கை மாறுபாடுகளால் பாதிப்படைந்து வருகிறது. இயற்கை வளங்களை அதிகளவில் சார்ந்துள்ள தமிழ்நாடு, காலநிலை மாற்றம் மற்றும் அதன் எதிர்விளைவுகளால் தொடர் அச்சுறுத்தலை எதிர் கொண்டுள்ளது.

கோவிட் 19, தொற்று நோய் பாதிப்புகளை வெளிச்சமிட்டுக் காட்டியதோடு, மனித சுகாதாரத்திற்கும் இயற்கைக்கும் இடையேயான தொடர்பையும் அடிக்கோடிட்டு காட்டியுள்ளது. இயற்கை வாழ்விடங்களின் பாதிப்பால்,

விலங்குகளுக்கு பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக பல்வேறு ஆய்வுகள் உணர்த்துகின்றன. காடுகளை அழிப்பது போன்ற சுற்றுச்சூழல் மாறுபாடுகளால் நோய்க்கிருமிகள் உருவாகின்றன. மேலும் மனித செயல்பாடுகள் மற்றும் காலநிலை மாற்றத்தால் இயற்கைச் சூழல் அமைப்பு அழுத்தத்திற்குள்ளாகிறது. மனிதர்களுக்கும் நோய்க்கிருமிகளுக்குமிடையே சமன் செய்யும் சாதனமாக இயற்கை அமையும் என்று அறியப்பட்டுள்ளது. மேலும், கோவிட் 19 நோய் தொற்றிலிருந்து பொருளாதார மற்றும் சமூக இழப்புகளை மீளப்பெறுவதற்கும் இது உதவிகரமாக விளங்கும்.

**உலகத்தை மாற்றுதல்:** தற்கால மற்றும் எதிர்காலத் தலைமுறையினரின் தேவைகளை நிறைவு செய்ய ஏதுவாக நிலைத்த நுகர்வு மற்றும் உற்பத்தி, இயற்கை வளங்களை சிக்கனமாகக் கையாளுதல் உள்ளிட்ட செயல்பாடுகள் மூலம் இந்தக் புவிக்கோளத்தை

அழிவிலிருந்து காப்பாற்ற உலகளவில் உறுதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உள்ளூர் பங்குதாரர்கள், தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகள், கல்வியாளர்கள், உள்ளூர் சமூகத்தினர் மற்றும் பொதுமக்களின் பொறுப்பு மற்றும் கவனத்திற்குரிய பிரச்சனையாக காலநிலை மாற்றம் விளங்குகிறது.

**1.1. சுற்றுச்சூழல் பாதுகாப்பு:**

எதிர்காலத் தலைமுறையினரின் தேவைகளை நிறைவு செய்யும் திறனை சமரசம் செய்து கொள்ளாமல், நிகழ்காலத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வளர்ச்சிப் பாதையை உருவாக்குவதே நிலையான வளர்ச்சிப் பொருளாதாரத்தின் மற்றொரு வழிகாட்டுக் கொள்கையாகும். நிலைத்த சூழல் அமைப்பு, சுற்றுச்சூழல், சமூக, பொருளாதார அமைப்புகள் ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதை ஏற்றுக் கொள்வதுடன், மக்களை மேம்படுத்தி அவர்களிடையே

சமநிலை ஏற்படுத்துவதையும் சமநீதி வழங்கப்படுவதையும் உறுதி செய்து, அவர்களை உலகளாவிய குடிமகனாக உணரச் செய்கிறது.

**அ. அரசியலமைப்பில் வழிவகை**

உலகில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை முதன் முதலாக அரசியலமைப்புச் சட்டத்தில் வலியுறுத்திய அரசுகளில் இந்திய அரசும் ஒன்றாகும். "சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதோடு, நாட்டின் காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாக்கவும் அரசு முயற்சிக்கும்" என அரசியலமைப்பின் 42–வது திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மாநிலத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் ஒரு பகுதியான 48 (ஏ) பிரிவு வலியுறுத்துகிறது. அதுபோல், "இயற்கைச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவது, இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்" என அடிப்படைக் கடமைகளுக்கான பிரிவு 51 (ஏ)(ஜி) தெரிவிக்கிறது. ஒரு மக்கள் நல அரசை உருவாக்குவதற்கான செயல்

திட்டத்தை வரையறுத்துள்ள இந்திய அரசியலமைப்பு, மக்களின் நலவாழ்வு மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் நாட்டின் இயற்கை வளங்களை சரியான அளவில் பயன்படுத்துவது அவசியமாகும் என்று தெரிவிக்கிறது. இதுவே, 'நிலையான வளர்ச்சி' என்ற கூற்றின் சாராம்சமாகும். இயற்கை வளங்கள் மற்றும் வாழ்வாதார அமைப்புகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்புடன் வளர்ச்சிப் பணிக்கான சூழலை ஏற்படுத்த வேண்டும்.

**ஆ. சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986,** சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்புடைய அம்சங்களைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கத்துடனும் நடைமுறைப் படுத்தப்பட்டது.

**இ. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006,** இந்தியாவின் அனைத்து பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்படும் புதிய திட்டங்கள், புதிய

செயல்பாடுகள், தற்போதுள்ள செயல்பாடுகளின் விரிவாக்கம் அல்லது நவீனமயமாக்கம் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் போது அவற்றினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு அத்திட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளை விதிக்கும் நோக்கத்துடன், ஒன்றிய அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**ஈ. கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை,** மீனவர் சமுதாயம் மற்றும் பிற உள்ளூர் சமுதாயங்களுக்கான வாழ்வாதாரப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் நோக்கில், ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986ன் கீழ், கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை, 2011 நடைமுறைக்கு வந்தது.

**1.2. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை:** பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் ஜூன் 1992ல்

நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த ஐக்கிய நாடுகளின் புவி உச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட முக்கியக் குறிப்பு 21–ன் படி, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் 13.10.1995 நாளிட்ட அரசாணை (நிலை) எண். 335–ன் படி சுற்றுச்சூழல் துறை உருவாக்கப்பட்டது.

**துறையின் பணிகள்:**

- சுற்றுச்சூழல் தொடர்பான கொள்கைகளை மாநில அரசிற்காக வடிவமைத்தல்.
- நிலையான வளர்ச்சிக்கான ஒரு கட்டமைப்பினை உருவாக்க பல்வேறு துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துதல் மற்றும் மாநிலத்திற்கான சுற்றுச்சூழல் கொள்கைகளில் முடிவுகள் மேற்கொள்ளுதல்.
- தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான முகமைகளுடன் இணைந்து, அவற்றின் பங்களிப்புடன் அறிவு மற்றும் அனுபவங்களை ஒருங்கிணைத்தல்.

- காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைத்துக் கொள்ளவும், அதன் பாதிப்புகளை குறைப்பதற்கும் தேவையான கட்டமைப்புகளை பல்வேறு பங்குதாரர்களுடன் (தொடர்புள்ள துறைகள், நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சியாளர்கள், வல்லுநர்கள், அரசுசாரா நிறுவனங்கள்) மூலமாக உருவாக்குதல்.
- கடலோர கட்டுப்பாட்டு மண்டல அறிவிக்கை மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை ஆகியவற்றின் சட்டப்பூர்வ விதிகளை நடைமுறைப்படுத்துதல்.

மேலும் இத்துறை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் மேற்கொள்ளப்படாத, ஏனைய சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பணிகளை மேற்கொள்கிறது. காலநிலை மாற்றம் தொடர்பான அனைத்துத் திட்டங்களையும், தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தும் ஒரு செயல்பாட்டுத் துறையாக, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை செயல்படுகிறது.

## தொலைநோக்கு

தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை நீடித்த மற்றும் சமநிலையான பயன்பாடு மூலமாக காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளிலிருந்து மீட்டு, சிறந்த சமூகத்தை உருவாக்குவதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டமாகும்.

## பணிகள்

இயற்கை மாறுபாடுகளுக்கு எதிரான அனைத்துத் தணிப்பு மற்றும் தழுவல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மாநிலத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும், இயற்கை வளங்கள் மற்றும் இயற்கை வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்குண்டான திட்டங்களைத் தயாரித்தலும் இத்துறையின் பணியாகும்.

## செயல்திட்டங்கள்

1) இயற்கை வளங்களைக் காத்துப் பேணுவதுடன், நிலையான சுற்றுச்சூழல் அமைப்புகளையும் சுற்றுச்சூழலின் செயல்பாடுகளையும் பேணிக்காப்பதன் மூலம் அவற்றின் நிலையான பயன்பாட்டை மேம்படுத்துதல்.
2) மாநில நிருவாகத்தின் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை மட்டுப்படுத்துதல் மற்றும் அதனை ஏற்று வாழ்தல் தொடர்பான உத்திகளைக் கொண்டு ஒரு முழுமையாக கொள்கையை உருவாக்குதல்
3) கடற்கரை ஒழுங்குமுறைப் பகுதிக்குகந்த வகையில், கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கையின்படி, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரித்தல் மற்றும் கடலோரப் பாதுகாப்பு மேலாண்மைத் திட்டம்

தயாரித்தல் மூலமாக 1076 கி.மீ நீளம் கொண்ட தமிழ்நாடு கடற்கரையை பாதுகாத்தல்.

4) கடற்கரை மேலாண்மை சேவைகள் அமைப்பு மூலம் நிலைத்த சுற்றுலா மேம்பாடு மற்றும் சிறப்பான கடலோர மேலாண்மையை உருவாக்குதல்.

5) காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைத்துக் கொள்ளுதல் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் துயரைத் தணிப்பதற்கான சிறந்த நடைமுறைகளை மேற்கொள்ளும்போது, காலநிலை மாற்றத்தை அடிப்படையளவில் மேலாண்மை செய்வதற்காக உள்ளூர் சமூகங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் திறன் மேம்படுத்துதல்.

6) தேசிய பசுமைப்படை மற்றும் சூழல் மன்றங்களின் ஆதரவுடன் இயற்கை வளங்களை நிலைத்தகு முறையில்

பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வை உருவாக்குதல்.

7) கார்பன் உமிழ்வைக் குறைக்கவும், ஒழுங்காற்று வழிமுறைகளைக் கொண்டு வருவதற்கும் பசுமைப் பரவலுக்கான செய்முறை மாதிரிகளை உருவாக்குவதன் மூலம் ஆற்றலைச் சேமித்தல் மற்றும் நுகர்வைக் குறைக்கும் ஆற்றல் திறன் மிக்க உள்கட்டமைப்புக்கான தர நிலைகளை உருவாக்குதல்.

8) வெளிப்படையான மற்றும் நம்பகத்தன்மையுடன் கூடிய சிறந்த சுற்றுச்சூழல் நிலைப்பாட்டை அடைவதற்கு ஏற்ற வலுவான மற்றும் உரிய கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்கி, பங்குதாரர்கள் பங்கேற்பு அணுகுமுறை மூலம், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான விரைவான நடவடிக்கையினை மேம்படுத்துதல்.

9) தமிழ்நாட்டில் 'நிகர பூஜ்ஜிய கார்பன்' அளவு என்ற நிலையை அடைவதற்காக

ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், இப்பணியில் சமூகத்தையும் இணைத்துக் கொள்வதற்கான நீண்ட கால செயல் திட்டத்தினை உருவாக்குதல்.

10) பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து பல பசுமை மாதிரிகளை உருவாக்கி, ஆதாரங்களின் அடிப்படையில் அளவிடுதல் மற்றும் வலுவான தொழில் நுட்ப உத்திகளை உருவாக்குதல்.

## 2.0. காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு மாநில செயல் திட்டம் (TNSAPCC)

தமிழ்நாடு அரசு, காலநிலை மாற்றம் ஒரு சிக்கல் நிறைந்த பிரச்னை என்பதை உணர்ந்து, அதற்கான நடவடிக்கை எடுப்பதில் உறுதியாக உள்ளது. காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அரசு பல நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் முக்கியமான பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் அரசின் பொறுப்பை

இது எடுத்துக்காட்டுகிறது. காலநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டத்தை (SAPCC) செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை அரசு புரிந்துகொள்வதோடு, மாறிவரும் காலநிலையால் ஏற்படும் வாய்ப்புகள் மற்றும் அபாயங்கள் ஆகிய இரண்டினையும் காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு மாநில செயல் திட்டம் (TNSAPCC) 2.0 (2022–2030) எடுத்துரைக்கிறது. அரசு உருவாக்கி செயல்படுத்த முனைந்துள்ள, இலக்குகள், இலட்சியங்கள், கொள்கைகள், செயல் திட்டங்கள் ஆகியவற்றை காலநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டம் (SAPCC) ஒருங்கிணைக்கிறது.

காலநிலை மாற்றத்திற்கான தேசிய செயல் திட்டத்தின் கீழ் தேசிய பணிகளுடன் இணைந்த காலநிலை உத்திகளை மாநிலம் செயல்படுத்துகிறது.

தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்டங்கள் (TNSAPCC) பின்வரும் பாதிக்கப்படக்கூடிய ஏழு துறைகளை அடையாளம் கண்டுள்ளது.

1. நிலையான விவசாயம்
2. நீர் வளங்கள்
3. காடுகள் & உயிர் பன்மயம்
4. கடலோரப் பகுதி மேலாண்மை
5. மேம்படுத்தப்பட்ட ஆற்றல் திறன் & சூரிய ஒளிப் பயன்கள்
6. நிலையான வாழ்விடம்
7. அறிவு மேலாண்மை

தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்ட வரைவு (TNSAPCC) 2.0 ஆவணம் பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு, நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் மாநிலத்திற்கான கூட்டு பாதிப்புக் குறியீடு ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

பல்வேறு துறைகளை இலக்காகக் கொண்ட காலநிலை நடவடிக்கைகளின் சில பகுதிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**2.1. பசுமை தமிழ்நாடு இயக்கம்**

தமிழகத்தில் காடு மற்றும் மரங்களின் பரப்பளவை மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 33 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்ற இலக்குடன் தமிழ்நாடு அரசு

பசுமை தமிழ்நாடு இயக்கத்தை அறிவித்துள்ளது. இந்த இயக்கத்தின் கீழ், பல துறைகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன், மாபெரும் பாரம்பரிய மற்றும் பல்வேறு மரங்களை நடும் திட்டம் எதிர்வரும் 10 ஆண்டுகளில் மக்கள் இயக்கமாக உருவாக்கப்படும்.

## 2.2. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்

காலநிலை மாற்றத்திற்கென தனி ஒரு இயக்கத்தை அரசு அறிவித்துள்ளது. இந்த இயக்கம் ரூ.500 கோடி செலவில் காலநிலை மாற்றத்தைத் தணித்தல் மற்றும் தழுவல் நடவடிக்கைகள் ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்தும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க மின் வினியோகத் திறனில் 16 சதவீத பங்களிப்பை தமிழ்நாடு வழங்குகிறது.

மாநிலத்தின் சூரிய ஒளி மற்றும் மின்சார வாகனக் கொள்கைகள் சிறந்த சுற்றுச்சூழலை உருவாக்கும் விதமாக மேலும் வலுப்படுத்தப்படும். காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்காக, அதன் தழுவல் முன்னுரிமைகளை உருவாக்குவதிலும், பல்வேறு துறைசார் கொள்கைகள் மற்றும் செயல்களைச் சரிசெய்வதிலும் தமிழ்நாடு முன்னேற்றமடைந்துள்ளது.

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் குறித்து பத்தி 4.2.–ல் விரிவாக கூறப்பட்டுள்ளது.

## 2.3. தமிழ்நாடு சதுப்பு நில இயக்கம்

தமிழகத்தில் சதுப்பு நிலங்களை சுற்றுச்சூழல் அடிப்படையில் மீட்டெடுக்கும் நோக்கத்துடன், சதுப்பு நிலங்களைக் கண்டறிந்து வரைபடம் தயாரித்து, வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டு சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுக்கும் பணி 5 ஆண்டுகளுக்குள் மேற்கொள்ளப்படும். இந்த பணியின் கீழ், எண்ம முறை

தொழில்நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த மேலாண்மை திட்டத்தைப் பயன்படுத்தி ஈரநிலங்களின் கணக்கெடுப்பு தொடங்கப்படும். சதுப்பு நிலங்களின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு பணியானது, உள்ளூர் சமூகங்கள் மற்றும் பிற தொடர்புடைய அனைத்துப் பங்காளர்களையும் உள்ளடக்கிய ஒரு பங்கேற்பு செயல்திட்டம் மூலம் மேற்கொள்ளப்படும்.

## 2.4. கடலோர மேலாண்மை

சுற்றுச்சூழல் துறை நகர்ப்புற வெள்ளத்தைக் குறைப்பதற்கான வழிமுறையாக மீன்வளத்துறை, நிலையான கடற்கரை மேலாண்மைக்கான தேசிய மையம் போன்றவற்றுடன் இணைந்து ஏரிகள், கடலோர வாழ்விடங்கள் மற்றும் முகத்துவாரங்களில் நுண்நெகிழியின் பரவலை ஆய்வு செய்து வருகிறது. இது வெள்ளம் மற்றும் புயலால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் நடவடிக்கையாக சதுப்பு நிலப் பரப்பளவை அதிகரிக்க முயற்சி மேற்கொள்கிறது.

ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ், 306.08 கோடி ரூபாய் செலவில் புயல் அலைகளின் தாக்கத்தைக் குறைக்கக்கூடிய, அவ்விடத்தின் நிலையைப் பொறுத்து மென்மையான, கலப்பு மற்றும் வலுவான பொறியியல் கட்டமைப்புகள் அல்லது காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் மரங்களை பயன்படுத்தி புயலை எதிர்கொண்டு கரையோரங்களைப் பாதுகாப்பதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2.5. கடற்கரைகளுக்கு நீலக் கொடி சான்றிதழ்**

கடற்கரைச்சூழல் மற்றும் சூழலியல் மேலாண்மை அமைப்பு திட்டத்தின் கீழ் நீடித்த தன்மை, உள்கட்டமைப்பு, சமவாய்ப்பு ஆகிய 33 குறியீடுகளின் அடிப்படையில் கடற்கரைகளுக்கு நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்படுகிறது. இதன் மூலமாக கடலோர வளங்களின் நிலைத்தகு வளர்ச்சி மற்றும் மேலாண்மையை உறுதி செய்வதுடன் உயர்

தரத்திலான பாதுகாப்பு சேவைகள், சுற்றுச்சூழல் கல்வி மற்றும் தகவலை அளிக்கிறது.

### 2.6. சான்றுகள் சேகரித்தல் மற்றும் தகவல்களை திரட்டுதல்

நமது எதிர்கால காலநிலை குறித்த சிறந்த சான்றுகளை சேகரித்து, பகுப்பாய்வு செய்வதற்கான நிறுவன கூட்டாண்மைகளை அடையாளங்கண்டு உருவாக்கவும், இதனடிப்படையில் முடிவுகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான தகவல்களைப் பயன்படுத்தவும், அரசானது பல முயற்சிகளை தொடங்கியுள்ளது. காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையம் (CCDM), அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், இந்திய வானிலை ஆய்வுத் துறை மற்றும் உலக வள நிறுவனம் (WRI) உள்ளிட்ட பல முக்கிய நிறுவனங்களுடன் குறிப்பாக எதிர்கால காலநிலை ஆபத்துக் கணிப்புகள், தாக்க மதிப்பீடுகள், தீவிர காலநிலை நிகழ்வுகளுக்கான வானிலை

முன்னெச்சரிக்கை பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் நவீன தரவுகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை சுற்றுச்சூழல் துறை மேற்கொண்டு வருகிறது.

## 2.7. உள்ளூர் பங்கெடுப்பை வளர்த்தெடுத்தல்

மாநில அரசின் முயற்சிகளுக்குத் துணையாக, மாவட்ட நிர்வாகம், உள்ளூர் சமூகங்களின் தேவைகளை காலநிலை மாற்ற அடிப்படையில் தெளிவாகப் புரிந்து கொள்வதோடு, இலக்குகளை செயல்களாக மாற்றும் பணிகளையும் மேற்கொள்ளும்.

உள்ளூர் அளவில் இதற்கான வலிமையான கட்டமைப்பை உருவாக்குவதற்காக சுற்றுச்சூழல் துறையானது அரசுக்கு உள்ளும் வெளியிலுமுள்ள திறமையான முகவர்/நிபுணர்களின் உதவியை நாடும்.

## 2.8. காலநிலைக்குகந்த பொருளாதாரத்தை உருவாக்குதல்

காலநிலை மாற்றமானது சுற்றுச்சூழல், உணவு, நலவாழ்வு, உள்கட்டமைப்பு சிக்கல்களை

ஏற்படுத்துவதோடு, மிகுந்த பொருளாதார நெருக்கடியையும் ஏற்படுத்துகிறது. காலநிலை மாற்றமானது, உள்கட்டமைப்பு, எரிசக்தி செலவுகள், தண்ணீர் பற்றாக்குறை மற்றும் வாழ்வாதார இழப்பு ஆகியவற்றில் அதிக தாக்கத்தை உண்டாக்குகிறது. காலநிலைத் தாக்கங்களை கையாளுவதற்கு பல துறைசார் உத்திகள் வகுக்கப்பட்டு கொள்கை நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**2.9. கீழ்க்கண்ட துறைகளில் மேற்கொள்ளப்படும் பணிகளும் மறைமுகமாக காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள உதவும்:**

**2.9.1. வேளாண்மை**

தமிழக சட்டப்பேரவை வரலாற்றில் முதன்முறையாக வேளாண்மைக்கென்று தனியொரு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கையில் கிராம அளவில் ஒருங்கிணைந்த பண்ணை மேம்பாடு, தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுதல், நுண்ணீர்ப் பாசன

தொகுப்புகளை ஊக்குவித்தல் மற்றும் வறட்சியை தாங்கும் பயிர் வகைகள் குறிப்பாக திணை மற்றும் பயறு வகைகளை பயிரிடுவதற்கான நிதியொதுக்கீடுகள் உள்ளன. இந்நிதிநிலை அறிக்கையின் ஒரு பகுதியாக, இளைஞர்களை வேளாண்மையில் ஈடுபடுத்துவதற்காக 'கிராமப்புற இளைஞர்கள் வேளாண்திறன் மேம்பாட்டு இயக்கம்' ஒன்றையும் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

**2.9.2. நீர் வளங்கள் மற்றும் நகராட்சி நிர்வாகம்**

காவிரிப்படுகையின் துணைப்பகுதியிலுள்ள வெண்ணாற்றில் காலநிலை தழுவல் திட்டத்தை செயல்படுத்துவதற்காக, ஒன்றிய அரசு மற்றும் தமிழக அரசு ஆசிய வளர்ச்சி வங்கியுடன் இணைந்து செயல்படுகின்றன. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சூறாவளி மற்றும் வெள்ளப்பெருக்கிலிருந்து கடலோர மாவட்டங்களைக் காப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அண்மையில், சென்னை மாநகரில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கைக் கருத்திற்கொண்டு, சென்னையின் அனைத்துப் பகுதிகளிலும் பாதாள

சாக்கடை அமைப்புகளை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

### 2.9.3. பொது சுகாதாரம்

கோவிட் 19 தொற்று பாதிப்பு மற்றும் காலநிலை மாற்றம் ஆகிய இரட்டை அச்சுறுத்தலானது நம்முடைய வாழ்க்கை முறையில் குறிப்பாக, அவசரகால உதவி, நிருவாகம், முன்னெச்சரிக்கை நடவடிக்கை, நோய்குறித்த முன்னறிவிப்பு, பொதுசுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றில், பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி, ஒருங்கிணைந்த நடவடிக்கையின் தேவையையும், நெருக்கடியான நிலையை சமாளிப்பதற்குரிய நம்முடைய அணுகுமுறையில் மாற்றத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது.

இது வணிக சமூகம் மட்டுமல்லாமல், ஏழைகள் மற்றும் பிற பிரிவினரின் வாழ்வாதாரம் ஆகியவற்றில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. 2020 ஆம்

ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தமிழ்நாட்டின் வளர்ச்சி வீதமும் சரிவைக் கண்டது. 2021-ம் ஆண்டு தொற்றுநோய் பாதிப்பு ஆண்டாக இருப்பினும், உண்மையான மற்றும் பெயரளவில் மூலதனத்திற்கான வளர்ச்சியில் முறையே 1.1% மற்றும் 5.49% என்ற வீதத்தில் தமிழ்நாடு வளர்ச்சியை எட்டியுள்ளது. தொற்றுநோய் பரவலைக் கட்டுப்படுத்துதல், இறப்பு எண்ணிக்கையைக் குறைத்தல், மக்களின் சமூக பாதுகாப்பு பிணைப்புகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் தமிழக அரசு பல நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. சுகாதார உள்கட்டமைப்பு, வானிலை மற்றும் நோய் முன்னறிவிப்பு அமைப்புகள், நோய் பரவாமல் இருக்க கட்டுப்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் பல்வேறு அளவுகளில் பயிற்சி மற்றும் திறன் – வளர்ப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

## 2.10. நகர்ப்புற பசுமைப் பகுதியை அதிகரித்தல்

தமிழ்நாடு பல வகையான விலங்குகள் மற்றும் பயிரினங்களைக் கொண்ட வளமான பல்லுயிர்ச்சூழலைக் கொண்ட, பல உள்ளூர் இனங்களைக் கொண்ட, உயிர்ப் பன்முகத்தன்மையுடைய பகுதியாக விளங்குகிறது. இருப்பினும், அதிகரித்து வரும் மக்கள்தொகை, காடுகள் அழிப்பு, நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் ஆகியவை நமது இயற்கை வளங்களை மிகப்பெரிய பாதிப்பிற்கு உட்படுத்தியுள்ளன. இதனால் பல்லுயிர் இழப்பு ஏற்படுகிறது. தொலைவில் உள்ள பழமையான வனப்பகுதிகளில் மட்டுமே பல்லுயிரினங்கள் பாதுகாப்பாக உள்ளதாகக் கருதப்படுகிறது. ஆனால் அதிகரித்து வரும் நகரமயமாக்கலுடன், நகர்ப்புறங்களிலும் பல்லுயிர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளது. இந்த இடைவெளியைக் குறைக்க நகர்ப்புறக் காடுகளை உருவாக்குதல் சிறந்த வழியாகும். எனவே,

நகர்ப்புற நிலப்பரப்புகளில் பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் சுற்றுச்சூழல் துறை பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எனவே, தமிழ்நாடு பசுமை இயக்கத்தின் கீழ் இதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## 2.11. நகர்ப்புற முறைசாரா அமைப்புகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்

நாட்டிலேயே முதன்முறையாக, பொது உடைமைகளான பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், வெள்ளநீர் வடிகால், சாலைகள், கட்டடங்கள் மற்றும் நீர்நிலைகளை மீட்டெடுத்தல் போன்றவற்றை உருவாக்கிக் கையாளுவதில் முறைசாரா தொழிலாளர்களை ஈடுபடுத்த, ஏழைகளுக்கான, நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்புத் திட்டத்தை முன்னோடித் திட்டமாக அரசு முனைந்துள்ளது.

## 2.12. கிராமப்புற வாழ்வாதாரத்துடன் தட்பவெப்ப நிலைத்தன்மையை ஒருங்கிணைத்தல்

மற்ற மாநிலங்களைப் போலவே, தமிழ்நாடும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை (MGNREGS) அதன் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன், காலநிலை மீள்திறன் பணிகளையும் ஒருங்கிணைக்கப் பயன்படுத்துகிறது. ஊதியம், உள்கட்டமைப்பு, நிறுவனங்கள் மற்றும் திறன் வளர்ப்பு முயற்சிகள் மூலம் ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மையை எளிதாக்க, இம்மாதிரியான திட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த அடிப்படை அணுகுமுறை, நீர் உள்கட்டமைப்பை திட்டமிடல், கிராம ஊராட்சிகளில் வெள்ளம் மற்றும் வறட்சி மேலாண்மைப் பணிகளை செவ்வனே செய்து முடிக்க வழிவகுக்கும். திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டங்களில் இத்திட்டம் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படும். அதே வேளையில், மற்ற மாவட்டங்களிலும் இதேபோன்ற திட்டங்களை

விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் புவி தகவியல் கருவிகளின் துணையுடன், கிராம ஊராட்சி அளவில் திட்டமிடலையும் அதிகரித்து வருகிறது.

**2.13. நெகிழித்தடை மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

மாநிலத்தின் நீர்வழிப்பாதைகள் மற்றும் வெள்ளத் தடுப்புகளில் நெகிழியின் பயன்பாடு மற்றும் தூக்கி வீசப்படும் நெகிழிகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த, இந்நிதியாண்டில் 10 கோடி ரூபாயை அரசு ஒதுக்கியுள்ளது. முன்னதாக 2019 ஜனவரியில், அரசு 14 வகையான நெகிழிப் பொருட்களுக்கு தடை விதித்துள்ளது. இப்போது உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் மூலம் அந்த நெகிழிப் பொருட்களுக்குண்டான தடையை திறம்பட செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. நெகிழித்தடையின் முக்கியத்துவத்தையும், இந்த ஆணையைக் கடைபிடிக்க வேண்டியதன்

அவசியத்தையும் உணர்த்துவதற்காக பல்வேறு சமூகத்தினர் மற்றும் இறுதிப் பயனாளர்களை அணுக குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## 2.14. காலநிலை இடர்களைவு – ஆற்றல் மற்றும் போக்குவரத்து துறை

சூரிய மற்றும் காற்றாற்றல் ஆகிய புதுப்பிக்கத்தக்க எரியாற்றலில் நிறைந்த வாய்ப்புகளைக் கொண்டு விளங்கும் தமிழ்நாடு, இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரியாற்றல் என்ற இலக்கினைப் பெருமையுடன் முன்னெடுத்துச் செல்கிறது. தூய ஆற்றல் துறையில் தலைமைத்துவமிக்க இம்மாநிலம் தொடர்ந்து இத்துறையில் முன்னோடியாகத் திகழ்வதற்கு தேவையான, விரிவான கொள்கைத் திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகிறது. சூரிய மற்றும் காற்றாலை ஆற்றல் திறனையும், நீர் மற்றும் இயற்கை எரிசக்தி அடிப்படையிலான ஆற்றலையும் நன்கு பயன்படுத்தி வருகிறது. கார்பன் அளவு குறைந்த, தூய எரிசக்திக்கான ஆற்றல்மிகு தடத்தில் மாற்றத்தை

நோக்கி பயணிக்கும் தமிழ்நாடு அரசு, தெளிவு மிக்க கொள்கைகளை வகுத்துச் செயல்படுகிறது. சூரிய ஆற்றலை மாநிலத்தின் வளர்ச்சிக்கான தொலைநோக்குடன் பயன்படுத்துதல், மீள்திறனும் நீடித்த சுற்றுச்சூழல் தன்மையுமுடைய தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தத் தக்க தொழிற்கொள்கையும், மின்வாகன உற்பத்திக்கான முதலீடு, பசுமைசார் வேலைவாய்ப்பு உள்ளிட்ட சூழல் ஆதரவு அமைப்பினைக் கொண்ட மின்வாகனக் கொள்கையும் இவற்றுள் இடம்பெற்றுள்ளன. இவ்வகையில் தொழில்துறை வளர்ச்சி இயைந்த சூழல் அமைப்பை தன்னகத்தே கொண்டு முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

இம்மாநிலத்தின் சூரிய ஆற்றல் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், நுகர்வோரால் உற்பத்தி செய்யப்படும் மின்னாற்றலை DISCOM எனப்படும் மாநில அரசின் விநியோக நிறுவனத்திற்கு விற்கவும், வீட்டுக்கூரையின் மேல் அமைக்கப்படும் சூரிய

ஆற்றல் உற்பத்தியாளர்களுக்கான நிகர அளவீட்டு வழிகாட்டுதல்களையும் மாநில அரசு வகுத்தளித்துள்ளது. தமிழ்நாட்டின் மொத்த எரிசக்தி உற்பத்தியினை மாநிலத்தின் பயன்பாட்டிற்காகவும், மற்ற மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கவும் இக்கொள்கை ஊக்குவிப்பாக அமையும்.

மாநில அரசு, அதன் மின் உள்கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு, புதிய துணைமின் நிலையங்களை அமைத்தல், எண்ம துணைமின் நிலையங்களை உருவாக்குதல், தற்போதுள்ள துணைமின் நிலையங்களை மேம்பாடு செய்தல் ஆகியவற்றின் மூலமாக, மின்செலுத்துத் தொடரமைப்பினை வலுப்படுத்துவதற்குண்டான பல்வேறு திட்டங்களை அரசு, செயல்படுத்தவுள்ளது. மேலும், புதுப்பிக்கத்தக்க எரியாற்றலை முறையாக ஒருங்கிணைப்பதற்காக, அகத் தொழில்நுட்பத் திறனை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

### 2.15. புதுமையான நிதியளிப்பு வழிமுறைகள்

தகவமைப்பு நிதி (AF), பசுமை காலநிலை நிதி (GCF) மற்றும் காலநிலை மாற்றத்திற்கான இந்தியாவின் தேசிய தழுவல் நிதி (NAFCC) போன்ற காலநிலை நிதிக்காக நிறுவப்பட்ட நிதி ஆதாரங்களைத் தவிர, மாநிலம் பசுமை நிதியுதவிக்கான புதுமையான வழிகளைக் கண்டறிந்துள்ளது.

## 3. தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனம்

மாநிலத்தின் காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளுக்கான நிதியின் பெரும்பகுதி, நிதிநிலை ஒதுக்கீட்டில் இருந்து பெறப்பட வேண்டும் என்பதை உணர்ந்து, கூடுதல் நிதி தேவைக்காக அரசு, தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனத்தை (TNGCC) அமைத்துள்ளது. நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 8ன் கீழ், முன்னர் குறிப்பிடப்பட்ட பசுமை தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மற்றும் தமிழ்நாடு சதுப்புநில இயக்கம் ஆகியவற்றின் பணிகளைச் செயல்படுத்த, ஒரு இலாப நோக்கமற்ற

நிறுவனமாக இது செயல்படும். இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே முதன்முறையாக, காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளைச் செயல்படுத்த இலாப நோக்கமற்ற, பொது மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற்று விளங்கும் நிறுவனமாக இந்நிறுவனம் விளங்குகிறது. இது காலநிலைத் தழுவல் மற்றும் இடர் களைவு நடவடிக்கைகளுக்கு அதிகப்படியான நிதியை வழங்குவது மட்டுமல்லாமல், அத்தகைய நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்துவதற்கான கூட்டாண்மை மற்றும் திறன்களை உருவாக்குவதும் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். நிதிநிலையறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று இயக்கங்களால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய முதலீடுகள் மற்றும் ஒத்துழைப்புகளை இந்நிறுவனம் ஊக்குவிக்கும். தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகம் (TNIFMCL) என்ற நிறுவனத்துடன் இணைந்து திட்ட மேலாண்மை

அலகு (PMU) ஒன்றினை அரசு அமைத்துள்ளது. ஒப்பளிக்கப்பட்ட மூலதனமான 5 கோடி ரூபாய் நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட இந்நிறுவனத்திற்கு, தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் போன்ற பிற சட்டப்படியான நிறுவனங்களின் பங்குகள் மூலம், மேலும் நிதி திரட்டப்படும்.

இடர் களைவு மற்றும் தழுவல் நடவடிக்கைகளை இலக்காகக் கொண்ட பல்வேறு துறைகளின் முன்னோடித் திட்டம்/திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனம் ஒரு நிதியை உருவாக்கும். குறிப்பாக,

1. தற்போது செயல்பாட்டில் உள்ள வளர்ச்சித் திட்டங்களுடன் காலநிலை மீள்தன்மை மற்றும் இடர் களைவு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க அல்லது தொடர்ந்து மேற்கொள்ள சாத்தியமான இடைநிரப்பு நிதியாக, அரசால் அமைக்கப்படும் தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனத்தின் நிதி மற்றும் பசுமைத்

தமிழ்நாடு நிதியானது பயன்படுத்தப்படும். இது காலநிலை மாற்றம் தொடர்பான பணிகளுக்கு உதவும்.

2. காலநிலை நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல், கண்காணித்தல், கணக்கீடு செய்தல் ஆகிய பொறுப்புகளைக் கொண்ட மாவட்ட நிர்வாகம் இப்பணிகளை மேற்கொள்ளும். மாவட்ட கனிமநிதி போன்ற விருப்புரிமை நிதி, மாநில அல்லது ஒன்றிய அரசின் ஒதுக்கீட்டு நிதி, தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்கள் அல்லது தனியார் துறை முதலீடு ஆகியவற்றிலிருந்து பெறப்படும் இடைநிரப்பு நிதி ஆகியவை தமிழ்நாட்டின் காலநிலை மாற்றத்திற்கான நிதியாகப் பயன்படுத்தப்படும். மேற்கூறிய அனைத்து அடிப்படை திட்டங்கள், எதிர் காலத்தில் தமிழகத்தில் பாதிப்புகளிலிருந்து மீண்டெழும் சமூகத்தையும் நிலைத்தகு எதிர் காலத்தையும் உருவாக்கும்.

நிலையான வளர்ச்சி இலக்கு, 13.2 மற்றும் 13.3-ல் காலநிலை மாற்றம் தொடர்பான ஆபத்துகள் மற்றும்

இயற்கைப் பேரழிவுகளுக்கு ஈடுகொடுத்து தகவமைப்புத் திறனை வலுப்படுத்துவதை வலியுறுத்துகிறது. இது தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்டம் (TNSAPCC), தகவமைப்பு உத்திகளை உருவாக்குவதற்கான அடிப்படை ஆவணமாக செயல்படுவதன் மூலம் இலக்கு 13.2, 13.3 ஆகிய இலக்குகளை அடைய மாநிலத்திற்கு துணை புரிகிறது. பொது மற்றும் தனியார் துறைகளில் மின்சார வாகனப் பயன்பாட்டை ஊக்குவிப்பதுடன், காலநிலை மாற்றத்தை தாங்கும் தன்மையை மேம்படுத்தும் பசுமைப்பரப்பை அதிகரித்தலும், ஈரநிலங்களைப் பாதுகாப்பதும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை நோக்கி நகர்வதும் மற்றொரு அணுகுமுறையாகும். இத்தகைய மாநில அரசின் நடவடிக்கைகள் காலநிலை மீள்தன்மையுடன் நெருக்கமான தொடர்புள்ளவை.

**4. கவனம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்கள் மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்கள்**

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, சுற்றுச்சூழல் சமநிலையை பேணிப்பாதுகாப்பது அவசியமாகும். மாநிலத்தின் சூழலியல், சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கவனம் செலுத்த வேண்டிய கீழ்க்கண்ட முக்கிய அம்சங்களை மாநில அரசு கண்டறிந்துள்ளது:–

4.1. நிலையான வளர்ச்சி இலக்குகள்

4.2. காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல்

4.3. கடலோரப் பகுதி மேலாண்மை

4.4. நீர்நிலைகளின் சூழல் சமநிலையை மீட்டெடுத்தல்

4.5. தொழில்நுட்ப செயல்பாடுகள்

4.6. சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் (ம) திறன் உருவாக்கம்

4.7. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**4.1. நிலையான வளர்ச்சி இலக்கு – 13 காலநிலை தொடர்பான நடவடிக்கைகள்**

சுற்றுச்சூழல் துறை என்பது மாநிலத்தின் காலநிலை மாற்றத் தகவமைப்பு மற்றும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்கும் துறையாகும். காலநிலை மாற்றத் தகவமைப்பு மற்றும் துயர் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலைத்தகு வளர்ச்சி இலக்கு 13–ஐ அடைய இத்துறை பாடுபடுகிறது.

**நிலையான வளர்ச்சி இலக்கு** 13: இது காலநிலை மாற்றத்தின் தீங்குகள் மற்றும் இயற்கைப் பேரழிவுகளுக்கு எதிரான தகவமைப்புத் திறனை வலுப்படுத்துவதை வலியுறுத்துகிறது.

**13.2. காலநிலை மாறுபாடு தொடர்பான நடவடிக்கைகளை தேசியக் கொள்கைகள், செயல் திட்டங்கள் மற்றும் திட்டமிடுதலுடன் ஒருங்கிணைத்தல்**

**13.3. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்களுக்கேற்ப தகவமைத்துக் கொள்ளுதல்,**

**பாதிப்புகளை மட்டுப்படுத்துதல், முன்னெச்சரிக்கை செய்தல் போன்றவற்றிற்கு தேவையான கல்வியறிவை வளர்த்தல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மனித மற்றும் அமைப்புசார் திறனை மேம்படுத்துதல்**

காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு மாநில செயல் திட்டம் 2.0 என்பது, நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் நெருக்கமாகப் பின்னிப்பிணைந்த தழுவல் மற்றும் தணிப்பு உத்திகளுக்கான மாநில கட்டமைப்பாகும். நிலையான வளர்ச்சி இலக்குக் கூறுகளான கோள், மக்கள், செழிப்பு, அமைதி மற்றும் கூட்டாண்மை ஆகியவை தம்முள் நெருக்கமான தொடர்பு கொண்டவை. தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான செயல்திட்டம் 13.2 மற்றும் 13.3, இலக்குகளை அடையத் துணைபுரிகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையானது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையுடன் இணைந்து, மாவட்ட அளவிலான பேரிடர் முன்னெச்சரிக்கைத் திட்டங்களை வகுப்பதில் அவர்களுடன் இணைந்து

செயல்படுகிறது. இது தீவிர வானிலை நிகழ்வுகளின் பாதிப்புகளைக் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கை அமைப்புகளை உருவாக்க உதவுகிறது. காலநிலை தொடர்பான பாதிப்புகள் மற்றும் இயற்கைப் பேரழிவுகளை எதிர்கொள்ளக்கூடிய மீள்திறனையும், தகவமைப்பையும் வலுப்படுத்துவதன் வாயிலாக தேசியக் குறியீட்டு அளவில் 'பாதிப்பின்மை நிலை' என்ற குறிக்கோளை இம்மாநிலம் அடைவதை நோக்கி வேகமாக முன்னேறுகிறது.

காலநிலை மாற்றத்தின் தீவிர நிகழ்வுகளால், இம்மாநிலம் கடும் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் உள்ளது. இத்தகைய பாதிப்புகளை உணர்ந்து, தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான செயல்திட்டம் 2.0 திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்கு ஏற்ற இடர் மேலாண்மையில், சுற்றுச்சூழல் துறை மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

**இலக்கு 14.– கடல்வாழ் உயிரினங்கள்**

14.1 கடலில் ஏற்படும் அனைத்து வகையான மாசுபாடுகளையும் தடுத்தல் மற்றும் குறிப்பிடத்தக்க அளவு குறைத்தல்.

14.2 கடல்சார்ந்த, கடலோர சமச்சீர் சூழலை குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகளிலிருந்து பாதுகாப்பதற்காக நீடித்த மேலாண்மை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

14.3 அனைத்து நிலைகளிலும் மேம்பட்ட அறிவியல் வழிமுறைகள் மூலமாக கடல் அமிலமயமாவதால் உண்டாகும் தாக்கங்களை கண்டறிந்து அவற்றைக் குறைத்தல்.

**நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான செயல்திட்ட அணுகுமுறை**

சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்கும் வகையில், ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியைத் தடை செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் முன்னிலையில், தொடங்கப்பட்டுள்ள "மீண்டும் மஞ்சப்பை" என்ற கருத்துப்பரப்பு நடவடிக்கையில் பல்வேறு நெகிழி மாற்று தயாரிப்புகளை ஊக்குவிப்பதுடன் ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப்பொருட்களின் புறக்கணிப்பை உறுதிசெய்ய, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தேசிய பசுமைப்படை பள்ளிகளுடன் இத்துறை இணைந்து செயல்படுகிறது.

**4.2. காலநிலை மாற்றத் தகவமைப்பும், தணிப்பும்**

காலநிலை மாற்றம் காரணமாக பாதிப்புகள் அதிகரிக்கலாம். இதனைக் கருத்திற்கொண்டு, மாநில அளவில், பொருத்தமான தணிப்பு மற்றும் தழுவல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு செயலாக்குவதன் மூலம் பல்வேறு இயற்கை அமைப்புகளில் ஏற்படும் இத்தகைய தீங்கு விளைவிக்கும் தாக்கங்களை குறைக்கலாம்.

தணிப்பு நடவடிக்கைகள் என்பது பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதற்கும்,

கட்டுப்படுத்துவதற்குமான செயல் திட்டமாகும், அதே சமயம், தழுவல் நடவடிக்கைகள் காலநிலை மாற்றத்தின் தாக்கத்திற்குள்ளாகும் தன்மையை அடிப்படையாகக் கொண்டவையாகும். எனவே, தணிப்பு என்பது காலநிலை மாற்றத்திற்கான காரணங்களை ஆராய்கிறது. அதே சமயம், தழுவல் அதன் தாக்கத்திற்கு தீர்வு காண்பது பற்றியதாகும்.

தழுவல் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளில் திறன்மிகு நிறுவனங்களை பணியமர்த்துதல் மற்றும் நிருவாகத்தை உருவாக்குதல், சுற்றுச்சூழலுக்குகந்த சிறந்த தொழில்நுட்பங்களில் புதுமையாக்கம் மற்றும் முதலீடுகள், காலநிலை மாற்றத்தைத் தாங்கும் உள்கட்டமைப்பு, நிலையான வாழ்வாதாரங்கள், நடத்தை மற்றும் வாழ்முறை சார்ந்த விருப்பத் தேர்வுகள் ஆகியவை, தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான செயல்திட்டம் 2.0ல் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

### 4.2.1. காலநிலை மாற்றத்திற்கான தேசிய தழுவல் நிதி

### 4.2.1. அ. சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மானாவாரி நீர்நிலைகளின் காலநிலை சரிபார்ப்பு

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையால் முன்மொழியப்பட்ட "சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களின் மானாவாரி நீர் நிலைகளின் காலநிலைக்காப்பு" என்ற திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் 23.80 கோடி ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நீர்நீலைகள் மற்றும் நிலவள மேலாண்மை, பயிர் மேலாண்மை, வாழ்வாதாரம், குறுந்தொழில் நடவடிக்கைகள் போன்ற பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.2.1. ஆ. தமிழ்நாடு மன்னார் வளைகுடாவில் காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் நிலையான வாழ்வாதாரத்திற்காக கடல்சார்

**வாழ்விடங்கள் மற்றும் உயிர்ப்பன்மய மேலாண்மை மற்றும் மறுவாழ்வுத் திட்டம்**

இத்திட்டம், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் மூலம் 24.74 கோடி ரூபாய் செலவில், தேசிய காலநிலை மாற்ற தழுவல் நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் கடலோரப் பகுதி மேலாண்மை திட்டங்களில் இந்தியாவிலேயே முதலாவதாகும். மேலும், இத்திட்டமானது தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான செயல் திட்டத்தோடு தொடர்புடைய திட்டமாகும். இத்திட்டம், மன்னார் வளைகுடாப் பகுதியிலுள்ள கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் கடலோர சமூகங்களில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்பை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை ஆய்வு (பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் மீன்வளம் உட்பட), காரியசச்சல்லி மற்றும் விலங்குச்சல்லி தீவுகளின் வாழ்விட மீள் உருவாக்கம் (பவளப்பாறை மற்றும் கடற்புல் மறுஉருவாக்கம்), மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

#### 4.2.3. பசுமை காலநிலை நிதி

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதகமான விளைவுகளை எதிர்கொள்ளவும், வளரும் நாடுகளுக்கு உதவுவதற்கும், ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பு மாநாட்டில் வகுக்கப்பட்ட, நிதி நடைமுறையின்படி, காலநிலை மாற்றத்திற்கான பசுமை நிதி உருவாக்கப்பட்டது.

குறிப்பிட்ட இலக்குடன் கூடிய ஈரநில மீட்டெடுப்பு மூலம், நகர்ப்புற சூழல் அமைப்பின் மேம்பட்ட மீள்திறனை ஏற்படுத்துவதற்கான திட்டமானது, தமிழ்நாடு வனத்துறையின் சார்பில் 165.69 கோடி ரூபாய்க்கு மதிப்பிடப்பட்டு, தமிழ்நாடு அரசின் மாநில அளவிலான உயர்மட்டக் குழு மற்றும் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் ஏற்பளிக்கப்பட்டது. இதற்கான, விரிவான திட்ட அறிக்கை ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற

அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு ஒன்றிய அரசினால் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

நிலையான வளர்ச்சி இலக்கு 13–ன் கீழ் காலநிலை மாற்றத்திற்கான செயலாக்கத் துறையாக இத்துறை இருப்பதால், பேரிடர் மீள்திறன் குறியீட்டைக் கணக்கிடுவதற்கு வருவாய்த் துறையுடன் இணைந்து செயல்படுகிறது. காலநிலை நிதியுதவிக்கென புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட, பசுமை காலநிலை நிதி முன்முயற்சியானது, இடர் காப்பீடு, இடர் சேகரிப்பு மற்றும் பிற காப்பீட்டுத் தீர்வுகளை மேற்கொள்ள உதவும்.

**4.2.4. காலநிலை வடிவமைப்பு மையம் (Climate Studio) :**

அண்ணா பல்கலைக்கழகத்தில் காலநிலை மாற்றம் மற்றும் அதன் தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆய்வு மையம், 'காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆராய்ச்சி மையம்' என தமிழ்நாடு அரசினால் மறுபெயரிடப்பட்டது. இச்சிறப்பு ஆய்வு

மையத்தை, காலநிலை மற்றும் அதன் அளவீடுகளை ஆய்வு செய்து, மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மையமாக மாற்றி அமைக்க தமிழ்நாடு அரசு முன்முயற்சி எடுத்துள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆய்வு மையத்தினை (CCCDM) காலநிலை மாற்றம் சார்ந்த அறிவு மேலாண்மைக்கான நிபுணத்துவம் வாய்ந்த அரசு சார்பு நிறுவனமாக ஏற்கனவே உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்டம் (TNSAPCC) அடையாளம் கண்டுள்ளது.

காலநிலை மாற்ற நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, உயர் கட்டமைப்பு வசதிகளுடன் ஒரு காலநிலை மாற்ற வடிவமைப்பு மையம் உருவாக்க ஜெர்மனியின் காலநிலை மாற்ற ஆய்வு நிறுவனமான Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) நிதியுதவியுடன் ரூபாய் 246.87 லட்சத்தில் நிறுவப்பட்டுள்ளது.

காலநிலை வடிவமைப்பு மையமானது, 2019–ல், தேவையான உபகரணங்களுடன் அமைக்கப்பட்டது. 2021–22ல் தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமையின் 3.85 கோடி ரூபாய் நிதியுதவியுடன் இயங்கி வருகிறது.

காலநிலை மாதிரியாக்கத்திற்கான சேமிப்பு மற்றும் துணைக்கருவிகளுடன் உயர்செயல்திறன் கணக்கீட்டு வசதிகளுடன் நிறுவப்பட்ட தனிச்சிறப்பு வாய்ந்த மையமாக இக்காலநிலை வடிவமைப்பு மையம் திகழ்கிறது.

**காலநிலை மாற்ற வடிவமைப்பு மைய வசதிகள்**

நீர், வனவியல், கடலோர சுகாதாரம் மற்றும் பல்லுயிர் பெருக்கம் ஆகியவற்றில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடுகளைச் செய்வதற்குத் தேவையான மாதிரிகள் மற்றும் கருவிகள்.

• மண்டல காலநிலை மாதிரிகள்.

• கடலோரப் பகுதி மேலாண்மை மற்றும் கடல் மட்ட உயர்வுக் கணிப்புகள்.

• நீர் வளத்துறையில் மென்பொருள் நிறுவுதல்.

• வேளாண்மை மற்றும் உலக நலன் சார்ந்த அளவீடுகளைக் கணக்கிடும் மென்பொருள்களை நிறுவுதல்.

• வனவியல் துறையில் உலகளாவிய பயிரின இயக்கிகளைக் கண்காணிக்கும் உயர் தொழில்நுட்ப மென்பொருள் நிறுவுதல்.

• புள்ளியியல் மற்றும் வரைபட வசதிகளை மேம்படுத்த மென்பொருள்கள் நிறுவுதல்.

**காலநிலை வடிவமைப்பு மையத்தின் நோக்கங்கள்–**

- தமிழ்நாடு முழுமைக்குமான நுண் அளவு செயற்கைத் திட்டமிடலுக்குத் தேவையான உயர் தரம் மிக்க நுணுக்கமான மண்டல அளவிலான காலநிலை தொடர்பான தகவல்களை திரட்டி அளித்தல்.
- IPCC–யின் தொடர் மதிப்பீடு அறிக்கைகளின் அடிப்படையில் வேளாண்மை, நீர் வளம், வனம் மற்றும் பல்–உயிரினம் மற்றும் கடலோர மண்டல

மேலாண்மை போன்ற இயற்கை வளங்களின் மீது காலநிலை மாற்றத்தின் பாதிப்பு குறித்து குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மதிப்பீடு செய்தல்.

- மேற்படி மதிப்பீடுகளை மேற்கொள்ள புவி தகவல் தரவு அடிப்படையில் தகவல்கள் பெறப்பட்டு, அவற்றிலிருந்து அறிவியல் வழியிலான அறிக்கைகள் தயாரிக்க நீர் வளத்துறையில் MIKE SHE மற்றும் SWAT, வேளாண்மை துறையில் DSSAT மற்றும் கடலோர மேலாண்மையில் SimCLIM மற்றும் வனத்துறையில் MAXENT எனப்படும் மென்பொருட்களைப் பயன்படுத்தி காலநிலை மாற்றம் தொடர்பான ஒரு தெளிவான உத்தியை அடைவதுடன் காலநிலை மாற்றம் தொடர்பாக எதிர்காலத்தில் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் அழிவுகளைக் கணித்தல் மற்றும் இயற்கை வளங்கள், சூழல் அமைவிடங்களில் நிகழும் மாற்றங்களைக் கணக்கிடுதல்.
- திட்டமிடல் நிபுணர்கள் மற்றும் அறிவியலாளர்கள், தன்னார்வு நிறுவனங்கள் மற்றும் சமூகத்தினர் இவை குறித்து அறிந்து கொள்வதற்காக மாநில மொழிகளில் தகவல்களை அளித்தல்.

**காலநிலை மாற்ற வடிவமைப்பு மையத்தின் செயல்பாடுகள்**

- தேசிய, மாநில மற்றும் உள்ளூரளவில், காலநிலை மற்றும் சூழல் குறித்த தகவல்களை சான்றுகளுடன் பெற்று அவற்றைக் கணக்கீடு செய்தல்.

- நீர்வளம், வேளாண்மை, வனவியல், கடலோர, நகர்ப்புற வாழ்விடம், சுகாதாரம் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் போன்ற துறைகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான பயிற்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.

- காலநிலை மாற்றம் தொடர்பான திட்டமிடல் மற்றும் பாதிப்புக்குள்ளாவதை ஈடுசெய்யத்தக்க செயல்பாட்டுக்குத் தேவையான அறிவியல் ஆற்றலை உருவாக்குதல்.
- காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்கள், தொழில்நுட்பங்களை பரிமாறிக்கொள்ளவும் ஒருங்கிணைந்து ஆய்வு நடவடிக்கையில்

ஈடுபடவும், அனைத்து ஆய்வு நிறுவனங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தகவல் மையம் உருவாக்குதல்.

**காலநிலை மாற்ற வடிவமைப்பு ஆய்வு மையத்தின் எதிர்கால பயன்கள்**

- மாவட்ட, வட்டார அளவிலான காலநிலை மாற்றப் பதிவுகள்.
- காலநிலை மாற்றம் தொடர்பாக அனைத்து தரப்பினரும் புரிந்துகொள்ளும் வகையில் ஒரு வலைதளம் உருவாக்குதல்.
- அவ்வப்போதைய காலநிலை மாற்றத் தகவல்களை வழங்கும் பொருட்டு பன்னாட்டுக் காலநிலைத் தரவுகளை உடனுக்குடன் சேகரித்தல்.
- காலநிலை மாற்றம் தொடர்பான அனைத்து நிறுவனங்களையும், ஆய்வு நிலையங்களையும் ஒருங்கிணைத்து, தொழில்நுட்பம் மற்றும் தரவுகளை பரிமாறிக் கொள்வதுடன்,

அவற்றுடன் ஒருங்கிணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

- காலநிலை சார்ந்த அறிவியல் சமூகத்தில் வெளியிடப்படும் பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான ஆய்வுகள் குறித்த மஞ்சள் பக்கத் தகவல்களை ஒன்றிணைத்தல்.
- இளைஞர்களிடையே காலநிலை மாற்றம் சார்ந்த நிபுணத்துவத்தை ஏற்படுத்துதல்.

### 4.3. கடலோர மண்டல மேலாண்மை

தமிழ்நாடு 1076 கி.மீ. நீளமுள்ள, பரந்த கடற்பகுதியைக் கொண்டுள்ளது. இது இந்திய கடலோரப் பகுதியில் 15 சதவீதம் ஆகும். இது, சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள், கடற்பாறைகள், கடற்புற்கள், உப்பு நிலங்கள், மணல் தேரிகள், மணல் குன்றுகள் போன்ற பல்வேறு வகையான கடலோர வாழ்விடங்களைக் கொண்டுள்ளது.

கடலோர மற்றும் கடல் பகுதிகளில் ஒருங்கிணைந்த மற்றும் நிலையான நிர்வாகத்தை

ஊக்குவிக்க, பல ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுவது அவசியமாகிறது. கடலோர செயல்முறைகள், கடற்கரை மேலாண்மை, கடலோர பாதிப்பு மற்றும் அபாயங்கள் தொடர்பான அறிவினை மேம்படுத்துதல் ஆகியவை இதன் முக்கிய நோக்கமாகும்.

கடல்சார் மற்றும் கடற்கரை சூழலியலமைப்பை நிலைத்த தன்மையுடன் பாதுகாப்பதையும், அதனை குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகளிலிருந்து தவிர்ப்பதையும் நிலையான வளர்ச்சி இலக்கு 14 வலியுறுத்துகிறது.

### 4.3.1. கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் (Coastal Zone Management Plan)

கடலோரப் பகுதிகளைப் பாதுகாக்கவும் மற்றும் கடலோரப் பகுதிகளில் நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கவும், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் கீழ் வெளியிடப்பட்ட, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற

அமைச்சகத்தின் அறிவிக்கை எண்.19(E), நாள். 06.01.2011 மூலம் வெளியிடப்பட்டது.

இவ்வறிவிக்கையின்படி கடற்பகுதிகள் 5 வகை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன:

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–I (சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–II (வளர்ச்சியடைந்த பகுதி)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–III (ஊரகப் பகுதி)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–IV (கடல்நீர் பகுதியில் உயர் அலை கோட்டிலிருந்து, நாட்டின் கடல் எல்லை பகுதிக்கு (12 நாட்டிகல் மைல்கள்) இடைப்பட்ட கடல் பகுதியும் மற்றும் அலை தாக்கமுள்ள நீர்நிலைப்பகுதிகள்)

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–V சிறப்புக்கவனம் செலுத்தி பாதுகாக்கப்பட வேண்டிய குறுகிய கடல் சூழல் பகுதிகள்

கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கையின் படி, மாநில அரசால் கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரித்தல் என்பது அவசியமான ஒன்றாகும்.

கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011–ன் வழிமுறைகளின் படி, தமிழ்நாட்டில் உள்ள கடலோர மாவட்டங்களுக்கான வரைவு கடலோர மண்டல மேலாண்மை திட்டம் தயாரிக்கும் பணி, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் ஏற்பு பெற்ற நிறுவனமான சென்னையில் உள்ள தேசிய கடலோர நிலைத்தகு மேலாண்மைக்கான மையத்திடம் (National Centre for Sustainbale Coastal Management) வழங்கப்பட்டது.

தேசிய கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்தின் பரிந்துரைகளின்படி, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு 24.10.2018 அன்று ஒப்புதல் வழங்கியது. 117 வரைபடங்களை உள்ளடக்கிய அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டம் சுற்றுச்சூழல் துறையின் (www.environment.tn.nic.in) (http://tnenvis.nic.in) வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் மென்பொருள், மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்கள் மற்றும் தொடர்புடைய துறையினருக்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019 விதிகளின்படி, கடலோர

மண்டல மேலாண்மைத் திட்டத்தினைத் தயாரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது. அதன்படி, தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் 1:25000 என்ற அளவில் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019ன் படி தயாரிக்கும் பணி, 1.82 கோடி ரூபாய் செலவில், ஒன்றிய அரசின் தேசிய கடலோர நிலையான மேலாண்மை மையத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது, அது தொடர்பான தொடர்புடைய துறைகளுக்கான கூட்டம் 16.03.2022 அன்று நடத்தப்பட்டது.

கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை 2019–ன்படி தயாரிக்கப்படும் கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கும்வரை, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011–ன்படி தயாரிக்கப்பட்ட, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினைப் பின்பற்றுமாறு ஒன்றிய அரசு, அனைத்து மாநிலங்களையும் அறிவுறுத்தியுள்ளது.

சுற்றுச்சூழல் துறையானது, கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு பரிந்துரை வழங்கும் ஒரு மாநில அமைப்பு ஆகும். கடலோர ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் ஏற்படும் விதிமீறல்களைக் கண்காணித்தல், ஜிபிஎஸ் கருவி உதவியுடன் வரைபடங்களைத் தயார் செய்தல், அறிக்கைகள் அளித்தல் போன்ற பணிகளில் பசுமைப்படைக்கு (Green Squad) உதவியாக புவியியல் தகவல் அமைப்பு செயல்படுகிறது.

### 4.3.2. உள்ளூர் அளவிலான கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டத்தின் கீழ் உள்ளூர் அளவிலான ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினை 1:5000 அளவிலான வரைபடங்களை, 2.99 கோடி ரூபாய் செலவில் தயாரிப்பதற்கான ஏற்பாணையினை, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மையத்திற்கு, தமிழ்நாடு அரசின்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அனுமதி அளித்துள்ளது. இந்த உள்ளூர் அளவிலான வரைபடங்கள் மூலம், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற முகமைகள் கடற்கரை மேலாண்மை திட்டங்களை செயல்படுத்த இயலும்.

### 4.3.3. கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் ஒழுங்குமுறை விதிகளை நடைமுறைப்படுத்துதல்

கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிமுறைகளானது, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2011–ல் கூறப்பட்டுள்ளவாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விதிமுறைகளை அறிவியல் முறையிலான கொள்கைகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதன் மூலமாக, கடலோரப் பகுதிகள், அதன் தனித்துவமிக்க சுற்றுச்சூழல் மற்றும் கடல் பகுதிகள் பாதுகாக்கப்படுகின்றன. மேலும் இந்த

விதிமுறைகள் கடலோரப்பகுதிகளில் வசிக்கும் மீனவ சமூகத்தினர் மற்றும் உள்ளூர் மக்களுக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பை அளிக்கும் நோக்கத்தோடு நடைமுறைப்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு ஒரு கடலோர மாநிலமாக விளங்குவதால், இந்த விதிமுறைகள், மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்ள கடலோரப் பகுதி மேலாண்மை அமைப்புகள் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### 4.3.4. கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்கள் (Coastal Zone Management Authorities)

கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும், அப்பகுதிகளின் விதிமீறல்களைக் கண்காணிக்கவும், மாநில அளவிலான கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் முதன்மைச் செயலாளர் / கூடுதல்

தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், சுற்றுச்சூழல் துறை இயக்குநரை உறுப்பினர் செயலராகவும் கொண்டு இக்குழுமம் செயல்படும்.

மாநில அரசு, மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்களை 1998–ஆம் ஆண்டு அமைத்துள்ளது. இக்குழுமங்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கூடி கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கைகள் குறித்த பொருண்மைகள் மீது முடிவுகள் மேற்கொள்கின்றன.

**4.3.5. ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் நிலை II (Integrated Coastal Zone Management Plan, Phase–II (ICZMP Phase II)**

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது, கடலோர மற்றும் கடல் வள திறன் மேம்படுத்துதல் திட்டத்தின் (Enhancing Coastal and Ocean Resource Efficiency–ENCORE) மூலம், இந்தியாவின் அனைத்து கடலோர மாநிலங்கள் மற்றும்

யூனியன் பிரதேசங்களில், கடல் வளத்திறனை மேம்படுத்த, உலக வங்கியின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மையை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இத்திட்டம் பின்வரும் விரிவான கூறுகளின் கீழ் செயல்படுத்தப்படும்.

1. கடலோர மற்றும் கடல் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.
2. மாசு குறைப்பு, மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாடு.
3. கடலோர சமூகத்தின் வாழ்வாதார மேம்பாடு/ பாதுகாப்பு.
4. சுற்றுச்சூழல் கல்வி, ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாடு.

மேலும், ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களை நிறைவேற்ற திட்ட இயக்குநர் தலைமையில், சுற்றுச்சூழல் துறையில் மாநில திட்ட கண்காணிப்பு அலகு (State Project Management Unit) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

**4.3.6. தமிழ்நாட்டிற்கான நீலக்கொடி கடற்கரைத் திட்டம் (Blue Flag Beach Programme for Tamil Nadu)**

நிலையான சுற்றுலா மற்றும் ஆரோக்கியமான கடலோர நிருவாகத்தை திட்டமிடவும், மேம்படுத்தவும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டுள்ள கடற்கரை சுற்றுச்சூழல் மற்றும் அழகியல் மேலாண்மை அமைப்பு [Beach Environment and Aesthetic Management System (BEAMS)] எனும் ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மை திட்டம், கடற்கரைகளில் இருக்கும் மாசுக்களைக் குறைக்கவும் மற்றும் சர்வதேச தர அளவீட்டிற்கு இந்தியாவின் கடற்கரைகளை உயர்த்தவும் தேவையான அம்சங்களுடன் செயல்படுத்தப்படுகிறது.

கடற்கரைகள் மற்றும் படகுத்துறைகளில் நீலக்கொடி சான்றிதழானது, சர்வதேச, அரசு சாரா, இலாப நோக்கமற்ற சுற்றுச்சூழல் கல்வி நிறுவனத்தால் (Foundation for Environmental Education)

அளிக்கப்படுகிறது. மேலும், பாதுகாப்பு, சுற்றுச்சூழல், கல்வி மற்றும் தகவல் சேவைகளை வழங்குதல் மற்றும் பொது சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகிய அளவுகோலின்படி, சுற்றுச்சூழல் கல்வி நிறுவனத்தின் நீலக்கொடி தரம் நிர்ணயிக்கப்படுகிறது. நீலக்கொடியானது, உள்ளூர், மண்டல மற்றும் தேசிய அளவில் சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் துறைகளை ஒன்றிணைக்கும் வகையில் மிகவும் சிறப்பு வாய்ந்த மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுற்றுச்சூழல் அடையாளமாக மாறியுள்ளது.

கடற்கரைக்கு நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்பட வேண்டுமெனில், கடற்கரை மேலாண்மைக் குழு, கடற்கரை மற்றும் குளியல் நீரின் தரம் பற்றிய தகவல் காட்சி, சுற்றுச்சூழல் கல்வி நடவடிக்கைகள், கடற்கரையைத் தூய்மையாக்கல், சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை நிருவகித்தல், பொதுப் பாதுகாப்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், மாசுபாடுகளை சமாளிக்க அவசரத் திட்டங்கள், கழிவறைகள்/ஓய்வறைகள், கடல்

மற்றும் நன்னீர் உணர்திறன் வாழ்விடங்களைக் கண்காணித்தல், குடிநீர் வழங்கல் போன்ற வசதிகள் உட்பட 33 அளவீடுகளை நிறைவு செய்வதாக இருக்க வேண்டும்.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள, கோவளம் கடற்கரையானது, நீலக்கொடித் திட்டத்தின் கீழ், நீரின் தரம் மற்றும் பாதுகாப்பு அளவுகளை நிறைவு செய்யும் வகையில், தமிழ்நாட்டில் ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டு, ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின், ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைச் சங்கம் (Society of Integrated Coastal Management (SICOM)) மூலமாக செயல்படுத்தப்பட்டது. கோவளம் கடற்கரையில் நீலக்கொடி கடற்கரைத் திட்டத்தைக் கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தலைமையில் கடற்கரை மேலாண்மைக் குழு (Beach Management Committee) அமைக்கப்பட்டுள்ளது. இந்த கோவளம்

கடற்கரைக்கு 21.09.2021 அன்று நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்பட்டது.

திருத்திய நிதிநிலை அறிக்கை 2021–22 உரையில், அடுத்த 5 ஆண்டுகளில் 10 கடற்கரைகளுக்கான மதிப்புமிக்க நீலக்கொடி சான்றிதழைப் பெறுவதற்கான திட்டத்தை இந்த அரசு அறிவித்துள்ளது. அதன்படி தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள கீழ்க்காணும் 10 கடற்கரைகளில் நீலக்கொடி சான்றிதழ் திட்டமானது செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

1) மெரினா கடற்கரை – சென்னை மாவட்டம்
2) மணமேல்குடி கடற்கரை – புதுக்கோட்டை மாவட்டம்
3) குஷி கடற்கரை – இராமநாதபுரம் மாவட்டம்
4) வெள்ளி கடற்கரை – கடலூர் மாவட்டம்
5) கோட்டைப்பட்டினம் கடற்கரை – புதுக்கோட்டை மாவட்டம்

6) நீலாங்கரை கடற்கரை – செங்கல்பட்டு மாவட்டம்

7) காமேசுவரம் கடற்கரை – நாகப்பட்டினம் மாவட்டம்

8) நாரவாக்கம், மரக்காணம் கடற்கரை – விழுப்புரம் மாவட்டம்

9) காயல்பட்டினம் கடற்கரை – தூத்துக்குடி மாவட்டம்

10) நெய்தல் நகர் கடற்கரை – நாகப்பட்டினம் மாவட்டம்

**4.3.7. தமிழ்நாட்டில் உள்ள கடலோரப் பகுதி, கழிமுகங்கள் மற்றும் ஏரிகளில் நுண்ணிய நெகிழி பொருட்களின் தாக்கம் குறித்த மதிப்பீடு**

சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி நிறுவனம் (SDMRI) மூலம் சுற்றுச்சூழலின் தரத்தை மேம்படுத்தவும் மற்றும் சமூக பொருளாதார அமைப்புகள் பயனடைவதற்கும் ஏற்ற நிவாரணம் மற்றும் மேலாண்மை செயல்திட்டங்களை பரிசீலிப்பதற்காக "தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், கழிமுகங்கள் மற்றும் ஏரிகளில் நுண்ணிய நெகிழி அளவு குறித்த

கணக்கீடு" என்ற திட்டம் சுற்றுச்சூழல் துறை மூலம் மூன்றாண்டுகளில் 81.20 இலட்சம் ரூபாயில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஆய்வின் எதிர்காலப் பயன்கள்**

1. நுண்ணிய நெகிழி உருவாகும் இடம் காணுதல்.
2. நுண்ணிய நெகிழி அதிகமாக காணப்படும் இடம்.
3. நுண்ணிய நெகிழியின் பாதிப்பு மற்றும் சுற்றுச்சூழல் தரத்தை மேம்படுத்துவதற்கான நிவாரண நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்

### 4.3.8. கடலோரப் பாதுகாப்பு மேலாண்மை மற்றும் செயல் திட்டம்

தமிழகக் கடற்கரை அதன் இயற்கைப் பண்புகளின் அடிப்படையில் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை வண்டல் சமவெளிக் கடற்கரையாக திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டங்களும், டெல்டாக் கடற்கரையாக தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களும், மணல் திட்டுக்கள் நிறைந்த கடற்கரையாக தெற்கு

இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களும், பாறைகள் நிறைந்த கடற்கரையாக கன்னியாகுமரி மாவட்டமும் விளங்குகின்றன.

மாண்பமை தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் கடலோரப் பாதுகாப்பு மேலாண்மை செயல் திட்டமானது, தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையத்தின் (NCSCM) மூலம் தயாரிக்கப்பட்டு, மாண்பமை தேசிய பசுமைத் தீர்ப்பாயத்திற்குப் பணிந்தனுப்பப்பட்டது. இதன் முக்கியப் பரிந்துரைகள் பின்வருமாறு:

- பல்வேறு அலையாற்றலின் நிலைகள் மற்றும் வடிவமைப்பு அளவுகளின் அடிப்படையில் பல்வேறு வகையான பசுமையான கடற்கரை உள்கட்டமைப்புகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. நாம் கடினமான கடலரிப்பு தடுப்பு கட்டமைப்புகளை தொடர்ந்து பயன்படுத்தினால், 2100-ம் ஆண்டு வாக்கில், இந்தியாவில் 30% கடற்கரைகள்

கடினத்தன்மை உடையதாக அமையும். இதனால் மீன்வள வாழ்விடமும் பல்லுயிர்ப் பெருக்கமும் குறையும். கடற்பகுதிகளில் கடினமான கடலரிப்பு தடுப்பு கட்டமைப்புகள், இயற்கையான சதுப்பு நில இடம்பெயர்வை தடுப்பதோடு, மேலும் கடலரிப்பை உருவாக்கலாம். எனவே, கரையோரங்களின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு அவற்றை கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் செயல் திட்டத்தில் சேர்க்க முன்மொழியப்பட்டுள்ளது. பசுமையான கடலரிப்பு தடுப்பு கட்டுமானங்கள் அல்லது இயற்கையான கடலரிப்பு தடுப்புகள் போன்றவை நீரின் தரத்தை உயர்த்துவதுடன், மீனின வாழ்விடத்தை வழங்குவதோடு, பல்லுயிர்ப் பெருக்கத்தையும் அதிகரிக்கின்றன. அத்துடன் புயல் தாக்கங்களுக்கு எதிர்கொள்ளக்கூடிய அதிக

மீள்தன்மை கொண்டவையாக இருப்பதோடு, சுற்றுலா வளத்தையும் மேம்படுத்துகின்றன. சதுப்பு நிலங்கள் மற்றும் சிப்பிப் பாறைகள் அலைகளின் இயற்கைத் தாங்கிகளாக செயல்படுகின்றன. சதுப்புநிலங்கள், அதனுள் வரும் கடலலையின் வேகத்தில் 50 சதவீதத்தை உறிஞ்சுகின்றன. ஒரு சதுர கிலோமீட்டர் உப்பு சதுப்பு நிலத்தில் ஆண்டுக்கு 1.11 லட்சம் லிட்டர் வாயுவுக்கு இணையான கார்பன் சேமிக்கப்படுகிறது.

- வண்டல் சமவெளி கடற்கரையில் 11 கட்டமைப்புகள் (திருவள்ளூர்–புலிக்கட்டு ஏரி முகத்துவாரம், செங்கல்பட்டு – திருவிடந்தை, நெம்மேலி, கானத்தூர், முகையூர், கோகிலமேடு மற்றும் ராஹத் நகர், கடலூர் – சங்கொலிக்குப்பம் மற்றும் பெரியகுப்பம், நாகப்பட்டினம்–சமந்தப்பேட்டை வேளாங்கண்ணி தேவாலயம்), மணல்மேடு

கடற்கரையில் இரண்டு கட்டமைப்புகள் (தூத்துக்குடி – ராஜ்கண்ணா நகர் மற்றும் குலசேகரப்பட்டினம்), மற்றும் பாறைக் கடற்கரைகளில் ஒரு கட்டமைப்பு (கன்னியாகுமரி – சோத்துவாலை) ஆகியவை, தற்போதைய செயல் திட்டத்தில் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில், கரையோரப் பாதுகாப்பிற்காக முன்மொழியப்பட்டுள்ளன. தமிழக கடற்கரையில் கடலரிப்பு இடங்களில் பொருத்தமான பசுமையான கடற்கரை உள்கட்டமைப்பை செயல்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பாதுகாப்பு பேணுதல் மற்றும் பாதுகாப்பிற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் கரையோரப் பகுதியைப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு, தொடர்புடைய துறைகளுடன் உரிய ஆலோசனைக்குப் பிறகு, பசுமைக்

கடற்கரை உள்கட்டமைப்புகளை உருவாக்க ரூ. 233.85 கோடிகள் மதிப்பீட்டில் திட்டம் முன்மொழியப்படும்.

### 4.4. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை (Environment Management Agency of Tamil Nadu)

தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணிக்கவும், அவற்றை செயல்படுத்தவும் "தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை" தமிழ்நாடு அரசால், 2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இம்முகமை, பள்ளிகளில் சுற்றுச்சூழல், கடலோரப் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் சூழல் மீட்புப் பணிகள் போன்ற நடவடிக்கைகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாநகராட்சிகள், நகராட்சிகள், அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தேசிய பசுமைப்படை

ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு நிதி, மாசுக் கட்டுப்பாடு வாரிய நிதி, அரசின் மானியம் உள்ளிட்ட நிதி மூலமாக பல்வேறு ஒத்த துறைகள் / உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து, நீர்நிலைகளில் சூழல் மீட்புப் பணிகளை, தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை செயல்படுத்தி வருகிறது. இது ஒரு தன்னாட்சி நிறுவனம் என்பதால் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்குள் ஒரு தொடர்பை ஏற்படுத்தி திட்டங்களை திறம்பட செயல்படுத்த வழிவகை செய்கிறது.

### 4.5. தொழில்நுட்ப செயல்பாடுகள் – புவியியல் தகவல் அமைப்பு (Geographical Information System)

உலக வங்கி நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் அவசரகால சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, சுற்றுச்சூழல் துறையானது, புவியியல்

தகவல் அமைப்பு பிரிவை நிறுவியது. அவசர கால சுனாமி மறுசீரமைப்பு திட்டம்/பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்தின் செயல்பாடுகளான தமிழகத்தின் கடலோரப் பகுதிகளின் உயர் அலைக் கோட்டினை வரையறுத்தல், ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரித்தல், கடலோர பாதிப்பு வரைபடங்கள் தயாரித்தல், உயர் அலைக் கோடுகளில் கல்தூண்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள், புவியியல் தகவல் அமைப்பு பிரிவு மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுச்சூழல் துறையானது, கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் ஒரு மாநில அமைப்பு ஆகும். கடலோர ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் ஏற்படும் விதிமீறல்களைக் கண்காணித்தல், வரைபடங்களை தயார் செய்தல், அறிக்கைகள் சமர்ப்பித்தல் போன்ற பணிகளில் பசுமைப்படைக்கு

(Green Squad) உதவியாக புவியியல் தகவல் அமைப்பு செயல்படுகிறது.

### 4.6. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் திறன் உருவாக்கம்

சுற்றுச்சூழல் என்பது ஒரு விரிவான மற்றும் பல்வேறு பண்புகள் சார்ந்த பொருண்மைகளை உள்ளடக்கியது. எனவே மாநிலத்தில் சுற்றுச்சூழல் சார்ந்து செயல்படக்கூடிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் சிறப்பான பங்களிப்பினை ஊக்குவிக்க, சுற்றுச்சூழல் குறித்த ஒருங்கிணைந்த தகவல் அமைப்பு அவசியமாகும்.

#### 4.6.1. சுற்றுச்சூழல் தகவல் மையம் (Environmental Information System –ENVIS)

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் 1982–ல் ஒன்றிய அரசு திட்டமான சுற்றுச்சூழல் தகவல் மையம் என்ற அமைப்பை நிறுவியது. சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS) ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதியுதவியுடன்

2002–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் சுற்றுச்சூழல் துறையில் இயங்கி வருகிறது.

தமிழகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் அதன் தொடர்புடைய பல்வேறு தகவல்களை இம்மையம் வழங்கி வருகிறது. தகவல்கள் சேகரித்தல், ஒப்பிடுதல், சேமித்தல், சீர்படுத்துதல் மற்றும் www.tnenvis.nic.in என்ற வலைதளத்தின் மூலம் சுற்றுச்சூழல் தகவல்களைப் பரப்புதல் ஆகிய பணிகளில் இம்மையம் ஈடுபட்டுள்ளது. செய்திமடல் வெளியிடுதல், வலைதளம் சார்ந்த தகவல் தொகுப்புகளை உருவாக்குதல், விழிப்புணர்வு பிரசுரங்கள், சுற்றுச்சூழல் அறிக்கை, சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்வு செயல்பாடுகள் போன்றவை இம்மையத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிர்கால சுற்றுச்சூழல் அறிக்கையினைத் தயாரிப்பதற்கு ஓர் அளவீட்டை வழங்குவதோடு, சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தைத் தயாரிப்பதற்கான கொள்கையை உருவாக்கும்

தரவுத்தளத்தை அளிப்பதும், மாநில சுற்றுச்சூழல் அறிக்கையின் நோக்கமாகும். தமிழ்நாட்டின் "மாநில சுற்றுச்சூழல் அறிக்கை, 2021" நடப்பு ஆண்டில் தயாரிக்கப்படும்.

பசுமைத்திறன் வளர்ப்புத் திட்டத்தின் (GSDP) சான்றிதழ் படிப்பை அளித்தல் மற்றும் கட்டம் அடிப்படையிலான வரைபடம் தயாரிக்கும் அமைப்பை (GRIDSS) நிறுவுதல் ஆகியவை சுற்றுச்சூழல் தகவல் மையத்தின் கூடுதலான தலைமைப் பணிகளாகும், சுற்றுச்சூழல் துறையானது, 2021–2022–ம் நிதியாண்டில் பசுமைத் திறன் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் "புவியியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வனவிலங்கு மேலாண்மை" மற்றும் "மேம்படுத்தப்பட்ட தாவர வகைப்பாட்டியல்" என்ற இரு சான்றிதழ் படிப்புகள் நடத்தப்பட்டன. கட்டம் அடிப்படையிலான வரைபடம் தயாரிக்கும் அமைப்புத் திட்டம் வாயிலாக, கரூர், சேலம் மாவட்டங்களில் பத்து வகையான துறை

சார்ந்த, கட்டம் அடிப்படையிலான வரைபடத்தினை சுற்றுச்சூழல் தகவல் மையம் தயாரித்துள்ளது.

**4.6.2. தேசிய பசுமைப்படை (National Green Corps)**

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 1998 ஆம் ஆண்டு, முதன்முறையாக சூழல் மன்றங்கள் துவங்கப்பட்டன. சூழல் மன்றங்கள் வெற்றிகரமாக செயல்பட்டதன் அடிப்படையில், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், 2002 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் சூழல் மன்றங்களை ஏற்படுத்தியது.

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் துறையால் நடத்தப்படும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகளில், 8000 தேசிய பசுமைப்படைப் பள்ளிகளிலுள்ள சுமார் 4 இலட்சம் மாணாக்கர்கள் பங்கேற்கின்றனர். ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒரு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டு, தேசிய பசுமைப்படையின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்,

மரங்கள் நடுதல், பசுமைத் தினங்கள் கொண்டாடுதல், சூழல் போட்டிகள், சூழல் சுற்றுலா போன்ற சமுதாய மற்றும் பள்ளிகள் சார்ந்த நிகழ்ச்சிகளில் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தேசிய பசுமைப்படை மற்றும் சூழல் மன்றங்கள் மூலம் உள்ளூர் பூர்வீக மரங்கள் மற்றும் காய்கறிகளைக் கொண்ட ஊட்டச்சத்து மிக்க தோட்டங்களை உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் உதவுகின்றன.

### 4.6.3. மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (State Environment Impact Assessment Authority of Tamil Nadu)

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006–ன் படி சில புதிய திட்டங்களுக்கும், ஏற்கனவே செயல்பாட்டிலுள்ள திட்டங்களை விரிவாக்கம் செய்ய அல்லது நவீனமயமாக்குவதற்கும், சுற்றுச்சூழல் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்பின் அடிப்படையில் சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறுவது கட்டாயமாகும். இவ்வறிக்கையின் அட்டவணையில்

குறிப்பிடப்பட்டுள்ள 'அ' பிரிவு இனங்களுக்கு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்தும், 'ஆ' பிரிவு இனங்களுக்கு அதன் செயல்பாடுகளைச் சார்ந்து மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்தும் சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மாசுபாடுகளைக் குறைக்கத் தேவையான திட்டங்களை ஆராய்ந்து சுற்றுச்சூழல் முன் அனுமதி வழங்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) மற்றும் அவ்வாணையத்திற்கு உதவ மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றை அமைக்க சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு, இத்திட்டங்களை ஆய்வு செய்து அதன் பரிந்துரைகளை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு (SEIAA) வழங்கும். இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில்,

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள சட்டப்பூர்வ விதிகளுக்குட்பட்டு திட்டங்களுக்கு, சுற்றுச்சூழல் முன் அனுமதியை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் வழங்கும். ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் 11.01.2022 நாளிட்ட அறிவிக்கை எண். 146–ன் படி, தற்போதைய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் மூன்று உறுப்பினர்களையும், மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு 12 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இந்த ஆணையம் மற்றும் மதிப்பீட்டுக்குழு மூன்று ஆண்டுகளுக்கு செயல்படும்.

**5. புது முயற்சிகள்**

**5.1. பசுமைக் கட்டடம் கட்டுதல்**

சுற்றுச்சூழல் துறை 1995ம் ஆண்டு துவங்கப்பட்டு வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக துறையின் செயல்பாடு பலமடங்கு அதிகரித்து வருகிறது.

"தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்" என்ற திட்டத்தை செயல்படுத்துவதில் சுற்றுச்சூழல் துறை ஒரு செயலாக்கத் துறையாக செயல்பட்டு வருகிறது.

பல்வேறு விரிவாக்கத் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதில் இத்துறை முக்கியப் பங்காற்றுகிறது. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம், சுற்றுச்சூழல் தகவல்பரப்பு மையம், புவியியல் தகவல் அமைப்புக் கூடம் மற்றும் தமிழ்நாடு காலநிலை மாற்றப் பிரிவு ஆகிய பல்வேறு திட்டங்கள் சுற்றுச்சூழல் துறையின் கீழ் செயல்படுகின்றன.

அதிக மற்றும் விரிவான பொறுப்புகளை இத்துறை கொண்டுள்ளதன் காரணமாக, சுற்றுச்சூழல் துறையின் கீழ் செயல்படும் மேற்கண்ட பல்வேறு பிரிவுகளின் தேவையைப் பூர்த்தி செய்ய ஏதுவாக

துறைக்கென தனியாக ஒரு கட்டடம் தேவை என்பது உணரப்படுகிறது. நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய ஒரு பசுமைக் கட்டடத்தை 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## 5.2. மாண்புமிகு தமிழக முதல்வரின் பசுமைப் புத்தாய்வு திட்டம்

தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத் தழுவல் மற்றும் தணிப்பு குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகளில், பல்வேறு புதிய முயற்சிகளுக்கு சிறப்பாகச் செயல்படும் இளைஞர்களை ஈடுபடுத்துவது அவசியம் என அரசு உணர்கிறது. இளைஞர்களின் கையில் எதிர்கால இந்தியா உள்ளது என்று சொல்லப்படும் நிலையில், தமிழ்நாடு அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் பசுமைப் புத்தாய்வு திட்டம் மூலம் சுற்றுச்சூழல் குறித்த பல்வேறு பிரச்சனைகளை அணுகி தீர்வு காணும் வகையில் இயற்கை மற்றும் இயற்கையில் ஆர்வமுள்ள இளைஞர்களை

அடையாளம் கண்டு செயல்படுத்த முனைந்துள்ளது. இளைய தலைமுறை மற்றும் மாணவர்களை ஈர்க்கும் வழிமுறைகள் மூலம் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சுற்றுச்சூழல் காலநிலை மாற்ற தாக்கத்தை குறைக்கவும், இயற்கையைப் பாதுகாக்கவும் தேவையான பசுமைக்கு வளம் சேர்க்கும் யோசனைகளை உருவாக்கவும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாதிப்புகளை குறைக்கவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பசுமை புத்தாய்வுத் திட்டம் தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். மாண்புமிகு முதல்வரின் பசுமைப் புத்தாய்வு திட்டத்தில் திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல், மேற்பார்வை மற்றும் கண்காணித்தல் ஆகிய அனைத்து அம்சங்களும், சுற்றுச்சூழல் துறை இயக்குநரகத்தால் செயல்படுத்தப்படும்.

**இத்திட்டத்தின் தொலைநோக்கு** : சுற்றுச்சூழல் சிந்தனையுடைய, ஆர்வமுள்ள, நன்கு பயிற்சி

அளிக்கப்பட்ட, செயலூக்கம் கொண்ட உலகின் எதிர்காலத்தலைவர்களை உருவாக்கி, வளர்த்தெடுப்பது மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை புத்தாய்வுத் திட்டத்தின் நோக்கமாகும்.

**குறிக்கோள் :**

(அ) வேலைவாய்ப்பு, வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியற்றில் சிறப்பாகப் பங்காற்றி, இந்தியாவின் மிகச்சிறந்த சுற்றுச்சூழல் முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குதல்.

(ஆ) சுற்றுச்சூழல் கொள்கையை வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துதலிலும், நிருவாகப் பணிகளிலும் சுற்றுச்சூழலில் ஆர்வமுடைய இளைஞர்களை ஈடுபடுத்துதல்.

(இ) தமிழ்நாடு முழுவதும் சுற்றுச்சூழல் சேவைகளை அளிப்பதற்குத் தேவையான உதவிகளை மாவட்ட நிருவாகத்திற்கு அளித்தல்.

(ஈ) சுற்றுச்சூழல் கொள்கை மேலாண்மைக்குத் தேவையான வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பிற பகுதிகளுக்கு முன்மாதிரிகளை உருவாக்குதல்.

(உ) தீவிரமான ஆராய்ச்சி பகுப்பாய்வுகள் மூலம் சுற்றுச்சூழல் அறிவுத் தகவல் திரட்டை ஏற்படுத்துதல்.

**பசுமைத் தோழர்களின் பணிகள்**

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் செயல்பாடுகளுக்குள் மாவட்ட நிர்வாகத்திற்கு பசுமைத் தோழர்கள், கீழ்க்கண்ட வகையில் உதவி புரிவார்கள்:

- பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மற்றும் தமிழ்நாடு சதுப்பு நில இயக்கம் ஆகிய மூன்று இயக்கங்களின் திட்டங்களை செயல்படுத்த உதவுதல்.

- மாவட்ட நிருவாகம் வலுவான முறையில் சுற்றுச்சூழல் சேவை செய்ய உதவுதல்.
- மாவட்டத்தின் பசுமைத் தோழர்கள், பசுமைப் பகுப்பாய்வு திட்டத்தின் சூழலுக்கு உட்பட்டு சுற்றுச்சூழல் கொள்கை குறித்த பிரச்சனைகளை ஆழ்ந்து புரிந்துணர்தல்.
- நெகிழி பயன்பாடு குறித்த தடையை தீவிரமாக செயல்படுத்த துணைபுரிதல் மற்றும் மீண்டும் மஞ்சப்பை செயல்பாட்டுக்கு உற்சாகமூட்டுதல் மற்றும் நெகிழிக்கு மாற்றாக அதனை உபயோகப்படுத்தும் நிலையை மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் கொள்கையை உருவாக்க உதவும் வகையில் சீரிய ஆராய்ச்சிகளை உருவாக்குதல்.
- மாவட்டத்திற்குள், சுற்றுச்சூழல் கொள்கைகளை செயல்படுத்துவதிலுள்ள இடைவெளிகளை முன்கூட்டியே அடையாளம் காணுதல்.

- ஏனைய மாவட்டம், மாநிலம் மற்றும் நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் சிறந்த செயல்பாடுகளை ஆராய்ந்து, அதனை மாவட்டத்திற்குள் செயல்படுத்தும் நிலைப்பாட்டை மதிப்பிடுதல்.
- சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை சார்ந்த அம்சங்கள் குறித்து ஏனைய அரசுத் துறைகள், குடிமக்கள் அடங்கிய சங்கங்கள், உள்ளாட்சி நிர்வாகம், கல்வி நிறுவனங்களின் பலதரப்பட்ட பங்குதாரர்களை ஈடுபடுத்துதல்.
- கொள்கை முயற்சிக்குரிய செயல்திறனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கருத்துக்கணிப்புகளைப் பெற்று, அதனை மேம்படுத்துதல்.
- அரசின் பல்வேறு கொள்கை திட்டங்களின் தாக்கங்களை அளவீடு செய்ய சிறந்த குடிமக்களை ஈடுபடுத்தும் உத்திகளை உருவாக்குதல்.

- புதுமையான புதுக்கொள்கைளின் தீர்வு மற்றும் இத்தகைய தீர்வுகளை செயல்படுத்துவற்குரிய திட்டத்தை உருவாக்குதல்.

**5.3. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்**

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்த்துப் போராடுவதும், அவற்றின் பாதிப்புகளை தணிப்பதும் தமிழ்நாடு போன்ற கடலோர மாநிலத்திற்கு மிகவும் கவனம் செலுத்த வேண்டிய அம்சமாகும். 2021–2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் போது, காலநிலை மாற்றத் தழுவல் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதற்காக, மொத்தம் ரூ.500 கோடி செலவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய மாநிலங்களை பொறுத்தவரை, தமிழ்நாட்டில் முதல் முறையாக இது போன்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நிர்வாகத்தின் உயர் மட்டத்தில், மாநில மக்களுக்கு நிலையான

மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற எதிர்காலத்தை உருவாக்குவதில் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது. மாநிலத்தின் காலநிலை மாற்றப் பிரச்சனைகளை மேற்பார்வையிடவும்,ஒருங்கிணைக்கவும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலர் தலைமையில் இந்த இயக்கம் செயல்படும்.

2022-2023-ஆம் நிதியாண்டில், இந்திய தொழில் நுட்ப நிறுவனம், சென்னை, காலநிலை மாற்றம் மற்றம் பேரிடர் மேலாண்மை, அண்ணா பல்கலைக்கழகம், உலக வள நிறுவனம் மற்றும் தேசிய கடலோர நிலைத்திட்ட கடற்கரை மேலாண்மை போன்ற நிபுணத்துவம் மிக்க நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.75.5 கோடிக்கான விவரங்கள் பின்வருமாறு:

1. **பங்குதாரர்களின் கருத்தரங்கம்**: உள்ளூர் சமூகங்கள் மற்றும் அரசாங்கத் துறைகளுக்கான

திறன் மேம்பாட்டு கருத்தரங்கம். காலநிலை மாற்றத்தால் உடனடி பாதிப்புக்குள்ளாகும் மாவட்டங்களில் உள்ள துறைகளின் தழுவல் மற்றும் தணிப்பு திட்டமிடலுக்கு முன்னுரிமை அளித்தல். சமூகத்திற்கு இயற்கை அடிப்படையில் தேவைப்படும் வெற்றிகரமான, சுயமான/தொழில்நுட்ப உத்திகளை மண்டல (ம) உலகளாவிய சூழல் அடிப்படையிலான அறிவியல் அறிஞர்களுடன் உருவாக்குதல்.

2. **இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் மூலம் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப கடலோர வாழ்விடங்களை மறுசீரமைப்பு செய்தல்:** சவுக்கு, பனை, முந்திரி மற்றும் பிற சிறப்பு இனங்களை நடவு செய்வதன் மூலம் உயிர் கேடயங்களை உருவாக்குதல். கடலோர மாவட்டங்களில் உள்ளூர் சுற்றுச்சூழல் அமைப்புகளில், வளரக்கூடிய இடங்களில் சதுப்புநிலத் தோட்டங்களை வளர்ப்பது. கடல் புல் மற்றும்

பவளப்பாறைகளின் வளர்ச்சியைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல். தமிழ்நாட்டின் நிலையான கடற்கரை மேலாண்மைக்கான செயல் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் புவி வரைபடம் தயாரித்தல்.

**3. கார்பன் செறிவூட்டல் திட்டம்**

கார்பன் சேமிப்பு என்பது ஒரு முக்கியமான சுற்றுச்சூழல் சேவையாகும். இது ஊட்டச்சத்துக்களின் அதிகரிப்பு, தண்ணீரை மேம்படுத்துதல் மற்றும் கணிசமான அளவு கார்பனை சேமித்து வைப்பதன் மூலம் தாவரங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சென்னை பெருங்குடியில், உயிர்க்கழிவு அகழ்ந்தெடுக்கும் அமைப்பினை சென்னை பெருநகர மாநகராட்சி அமைத்துள்ளது. நகராட்சி திடக்கழிவுகளை மரபுவழி உயிரின மாற்றம் செய்த பின்னர் பெறப்பட்ட மண்ணில், ஊட்டச்சத்துக்கள் மற்றும் கார்பன் அதிக அளவில் உள்ளது. நன்மங்கலம் வனப்பகுதியில் வனத்துறை,

சென்னை பெருநகர மாநகராட்சி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து, நன்மங்கலத்தில் ஒரு மாதிரி வனப்பகுதியை வளங்குன்றிய காடுகளுக்கு உயிர்ச்சுரந்த செறிவூட்டப்பட்ட மண்ணைச் சேர்த்து, மரங்கள் மற்றும் காடுகளின் வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்கத்துடன் மாதிரித் தளம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டம், ஒரு முன்னோடித் திட்டமாகும்.

4. **நிலையான வாழ்விடம்**

நம் வாழ்விடத்தின் சுற்றுச்சூழல் நலனை இனியும் புறக்கணிக்க முடியாது என்பதை உணர வேண்டிய காலம் தற்போது உருவாகியுள்ளது. மேலும் நமது சுற்றுச்சூழலின் பாதிப்பைக் குறைக்க பசுமைக் கட்டட நடைமுறைகளின் நன்மைகளை உணர வேண்டும்.

அரசு மற்றும் தனியார் கட்டடங்கள், தனி வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகியவற்றில் பசுமை இல்ல உமிழ்வைக் குறைப்பதன் மூலம் ஆற்றல் உற்பத்தி மற்றும் நுகர்வினை குறைத்து,

அதன் விளைவாக காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைத்தல் ஆகிய ஆற்றல் சேமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த வகையில், ஆற்றல் சேமிப்பு நடவடிக்கைகளில் குறிப்பாக, ஆற்றலைச் சேமிக்கும் விளக்குகள் மற்றும் மின்சாரத்தின் அவசியத்தைப் பற்றி குடியிருப்பாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், கட்டுமானர்கள் மற்றும் விரிவாக்கம் செய்பவர்களுக்குரிய செலவைக் குறைக்கும் காலநிலைக்கேற்ற கட்டடக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு பயிற்சிப் பட்டறைகள் மூலம் பயிற்றுவித்தல், ஆற்றல் திறன் கொண்ட வீடு கட்டும் திட்டங்களை உருவாக்குவதற்கு நிலையான வழிகாட்டு நடைமுறையை உருவாக்குதல், பசுமைக் கட்டட மதிப்பீட்டு முறையினை ஒரு முன்னோடித் திட்டமாக உருவாக்குதல் ஆகியவை புதிதாக மேற்கொள்ளப்பட வேண்டிய பெரும்பணிகளாகும்.

5. **காலநிலை கல்வியறிவு மற்றும் சர்வதேச காலநிலை உச்சிமாநாடு** – காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், காலநிலை அறிவியல், தழுவல் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள், ஊடகம் மற்றும் எண்ம முறையிலான காலநிலை மாற்றத் தணிப்புக்கான நடைமுறைகள் மற்றும் தீர்வுகள் ஆகியவற்றை மாணவர்களுக்கு கற்பித்தல் ஆகியவை இந்த விழிப்புணர்வு திட்டத்தில் அடங்கும். இவை மட்டுமன்றி, எண்மத் தொடர்புத் தளங்களான குறும்படங்கள், புலனங்கள் வாயிலாகத் தகவல் பரப்புதல், பசுமை தினக் கொண்டாட்டங்களில் காலநிலை வேறுபாடு குறித்த குழு விவாதங்கள், கணினி வழி பதாகைகள் உருவாக்குதல், தெரு நாடகங்கள், பொது விழிப்புணர்வு கருத்தரங்குகள் போன்ற சிறந்த நடைமுறைகளை கடைபிடித்தல் ஆகியவையும் காலநிலை மாற்ற பாதிப்புத் தடுப்புக்கான சிறந்த நடைமுறைகளாகும். சமூக அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆகிய

பங்காளர்களுடன் இணைந்து காலநிலை மாற்றத்திற்கான முக்கிய நிகழ்வுகளான உலக சுற்றுச்சூழல் நாள், உலக தண்ணீர் நாள், புவிநாள் போன்ற கொண்டாட்டங்களின் வாயிலாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

6. **காலநிலைத் திறன்மிகு கிராமங்கள்**

சமூக அளவில் காலநிலை மாற்ற பாதிப்புகளை எதிர்கொள்வதற்காக பல்வேறு தொழில்நுட்பம் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பு குறித்த அணுகுமுறையை சோதனை செய்வதற்காக முன்மாதிரி வாழ்விடங்களாக காலநிலைத் திறன்மிகு கிராமங்கள் உருவாக்கப்படும்.

பஞ்சாயத்து அளவில் நிலையான வளர்ச்சி இலக்கை அடைவதற்காக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்தி சுத்தமான சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பசுமையான கிராமங்களை நமது எதிர்கால குழந்தைகளின் நலனுக்காக உருவாக்க வேண்டும்.

உள்ளூர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அவர்களுடைய இயற்கை மூல வளங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவதன் மூலமும், சுற்றுச்சூழலை பாதுகாத்து, அது மேலும் சீர்கெடுவதை தடுப்பது குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதன் மூலமும் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் பல பங்குதாரர்களின் பங்களிப்புடன் பின்வரும் நோக்கங்களுக்காக இந்த முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

அ) கிராமங்களிலுள்ள நீர் மற்றும் மலை சார்ந்த இயற்கைச் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல்

ஆ) காலநிலை இடர்களுக்கு உள்ளாகும் உள்ளூர் சமூகத்திற்கான அறைகூவல்களையும், பாதிப்புகளையும் புரிந்து கொள்ளுதல்.

இ) காலநிலை மீள்தன்மையை உருவாக்குவதற்கும், தழுவல் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கும் எதிர்கால தீர்வுகளை உருவாக்குதல்.

ஈ) திறன்மிகு காலநிலை நடவடிக்கைகளுக்காக, வேளாண் ஆலோசனைகள் உள்ளிட்ட, கிராம அளவிலான காலநிலை தகவல் மையத்தை அமைப்பது போன்ற, சமூக அளவிலான வேளாண் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொருளாதார தீர்வைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.

உ) வேளாண் வனவியல், நிலப் பயன்பாடு, கால்நடை மேலாண்மை மற்றும் உயிரி எரிபொருட்களின் சிறந்த மேலாண்மைக்கான கார்பன்/ஊட்டச்சத்து சார்ந்த நேர்த்தியான நடைமுறைகளைக் கைக்கொள்ளுதல்.

ஊ) உழவர்கள் தங்களுக்குள்ளேயே தகவல் பரிமாற்றத்தின் மூலம் கற்றல் மற்றும் சந்தைத் தகவல்களை அறிந்துகொள்ளல் போன்ற சந்தை சார்ந்த செயல்பாடுகள்.

எ) களநிலையிலான காலநிலை சார்ந்த செயல்பாடுகளை திறன்மிகு கிராமங்களிலிருந்து அறிந்துகொள்ளுதல் மூலம் அரசு, பல்வேறு அரசுத்

திட்டங்களை மாநில அளவில் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு இது உதவும்.

**7. தட்பவெப்ப நிலையைத் தாங்கும் பசுமைக் கோயில்கள்** – கோயில்களில் தட்பவெப்ப நிலைத் தணிப்பு மற்றும் மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மாதிரி செயல் விளக்கம் செய்வதற்காக, மதுரை மற்றும் சென்னையில் தலா ஒன்று என மொத்தம் இரண்டு கோயில்கள் முன்னோடித் திட்டமாக எடுத்துக்கொள்ளப்படும்.

இந்த முன்னோடித்திட்டத்தில் சூரிய சக்தி விளக்குகள், நீர் மேலாண்மை, வெப்ப மேலாண்மை, பசுமையாக்குதல், கோயில் குளங்களின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு, நெகிழி மற்றும் நுண்நெகிழி அகற்றுவதற்கான செயல்பாடுகள் ஆகியவை அடங்கும். பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்த கோவில் நந்தவனங்களை வளப்படுத்துவதும் இதில் அடங்கும். இந்த முன்னோடித் திட்டம், பண்பாட்டு

விழுமிய மரபு சார்ந்த கட்டடங்களை, காலநிலை மாற்றத்திற்கேற்ப சிறப்பாக மாற்றுவதற்கான முன்னோடித் திட்டமாக விளங்கும்.

## 5.4. வெளிப்படைத் தன்மைக்கான முயற்சிகள் (Transparency Initiatives)

சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் நடைமுறையில் செயல்திறன், எளிமை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்த வெளிப்படைத் தன்மையான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. திட்டப் பயனாளிகள் மற்றும் பொதுமக்கள், தங்களது பணிகளை சுலபமாக மேற்கொள்ளவும், தங்களது விண்ணப்பங்களின் நிலையை எளிதாக அறிந்து கொள்ளவும், ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட "PARIVESH" என்ற இணையதளத்தை தமிழக அரசு பயன்படுத்தி இதற்கு வழிவகுக்கிறது.

பொதுமக்கள் குறைகளைப் போக்கும் விதமாக, ஒவ்வொரு மாதமும் திறந்தவெளிக் கூட்டம் (Open House Meeting) இத்துறையால் நடத்தப்பட்டு வருவதோடு,

இதன் புதுமுயற்சியாக தேசிய பசுமைப்படைப் பள்ளிகள் மற்றும் இத்துறை சார்ந்த பொருண்மைகள் குறித்து கூட்டம் நடத்தப்பட்டது.

## நிறைவுரை

சமகாலத்தில் உருவாகும் அநேக சுற்றுச்சூழல் சீர்கேடுகளின் சிக்கலான தன்மை, நிலையற்ற தன்மை மற்றும் அவசர சூழ்நிலைகள் ஆகியவை சமுதாயம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றிற்கிடையேயான உறவைப் பற்றிய ஏராளமான கேள்விகளை எழுப்பியுள்ளன. அந்த வகையில், மனித குலத்தால் எதிர்கொள்ளப்படும் கடுமையான சுற்றுச்சூழல் சிக்கல்களில் ஒன்றாக, காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. எனவே சுற்றுச்சூழல் கொள்கையினைப் பிற துறைகளுடன் கொள்கையுடன் ஒருங்கிணைத்து புதிய நிருவாக முறையை உருவாக்க வேண்டிய தேவையை தமிழ்நாடு அரசு உணர்ந்துள்ளது. எனவே மனிதர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரு தரப்பும் பரஸ்பரம் பயன்

அடையும் விதத்திலான புதிய திட்டங்களை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இது காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கான கொள்கையில் பயனளிக்கும் விதத்தில் அமையும்.

*****

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்

(குறள் 298)

**பொருள்** வெளிப்புறத் தூய்மையை நீர் வழங்கும்: அகத்தூய்மையை உண்மை ஒன்றே வழங்கும்.

### 1.0. முன்னுரை

தமிழ்நாடு அரசு, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974–ன் (மத்திய சட்டம் 6) பிரிவு 4 (1)–ன் கீழ் 19.02.1982 நாளிட்ட சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையின் அரசாணை எண் 340–ன்படி, தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியத்தை நிறுவியது. இது 1982 ஆம் ஆண்டு **பிப்ரவரி** 27 அன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டு அதே நாளில் வாரியம் நடைமுறைக்கு வந்தது. பின்னர், தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983 இயற்றப்பட்ட பிறகு,

மேற்குறிப்பிட்ட வாரியம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (TNPCB) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின்கீழ் செயல்படுகிறது. ஒன்றிய அரசின் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் மாநிலத்தின் சட்டப்பூர்வமான அமைப்பாக இவ்வாரியம் திகழ்கிறது. நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 பிரிவு 4–ன்படி, தலைவர், உறுப்பினர் செயலர், மாநில அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து நபர்கள், விவசாயம், மீன்துறை, தொழில் அல்லது வர்த்தகம் போன்றவற்றின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவல் சாரா மூன்று நபர்கள் மற்றும் மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அல்லது கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு நபர்கள்

ஆகியோர்கள் வாரிய உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 மற்றும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 ஆகியவற்றின் சட்டப்பிரிவுகளையும் மற்றும் இவற்றின் கீழ் இயற்றப்பட்டுள்ள கீழ்காணும் விதிகளையும் செயல்படுத்துகிறது:–

- தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983
- தமிழ்நாடு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983
- சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள், 1986
- தீங்கு விளைவிக்கும் வேதிப்பொருட்கள் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், 1989.

- நிலக்கரி சாம்பல் பயன்பாட்டு அறிவிக்கை, 1999
- ஒலி மாசுபாடு (ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 2000
- மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 2001
- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006
- தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை தாண்டி எடுத்துச்செல்லுதல்) விதிகள், 2016
- மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள், 2016
- திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016
- நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016
- மின்னணுக் கழிவு மேலாண்மை விதிகள், 2016

- கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு மேலாண்மை விதிகள், 2016

**வாரியத்தின் தொலை நோக்கு பணிகள்**

திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, திருத்தப்பட்ட காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம், 1986 ஆகியவற்றின் சட்டப்பிரிவுகளை நடைமுறைப்படுத்துதல் வாரியத்தின் தலையாய நோக்கமாகும்.

**வாரிய அமைப்பின் நோக்கங்கள்**:

- மாநிலத்தில் நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும், குறைக்கவும் தேவையான விரிவான திட்டங்களைத் திட்டமிடுதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபாட்டைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது அல்லது குறைப்பது தொடர்பான எந்தவொரு விஷயத்திலும் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

- அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஆய்வு செய்தல் மற்றும் அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரை அகற்றுவதற்கான அமைப்பு மற்றும் சுத்திகரிப்புக்காக அமைக்கப்பட்டுள்ள நிலையங்கள் தொடர்பான திட்டங்கள், விவரக்குறிப்புகள் அல்லது பிற தரவுகளை மதிப்பாய்வு செய்தல்.
- நீர் மற்றும் காற்று மாசுபாட்டைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் தொடர்பான திட்டங்களில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடவுள்ள பணியாளர்களுக்குப் பயிற்சியை ஏற்பாடு செய்வதில் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் (CPCB) ஒத்துழைத்து, அது தொடர்பான பெருமளவிலான விழிப்புணர்வு கல்வி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

- நீர் மற்றும் காற்று மாசுபாடு தொடர்பான சிக்கல்கள் மற்றும் நீர் மற்றும் காற்று மாசுபாட்டைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் தொடர்பான சோதனை ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றில் பங்குபெறுதல்.
- ஓடை அல்லது கிணற்று நீரின் மாதிரிகள் அல்லது அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரின் மாதிரிகள் மற்றும் காற்று மாசுபாட்டினைப் பகுப்பாய்வு செய்தல் உள்ளிட்ட வாரியத்தின் செயல்பாடுகளை திறம்படச் செய்ய ஏதுவாக ஆய்வகங்களை நிறுவுதல் அல்லது அங்கீகரித்தல்.
- ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் அல்லது மாநில அரசால் அவ்வப்போது ஒப்பளிக்கப்படும் பிற செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

**நிறுவன அமைப்பு**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், (i) சென்னையில் உள்ள தலைமை அலுவலகம் (ii) எட்டு மண்டல அலுவலகங்கள் (iii) முப்பத்தி எட்டு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் ஆகியவற்றைக் கொண்ட மூன்று அடுக்கு அமைப்பினைக் கொண்டுள்ளது. கூடுதலாக ஐந்து பறக்கும் படை அலுவலகங்கள் மற்றும் மூன்று உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கழிவுநீர் மாதிரிகளை ஆய்வு செய்யவும், தொழிற்சாலைகளின் புகை வெளியேற்றத்தின் மாதிரிகளை சேகரித்து காற்றுத்தரத்தை ஆய்வு செய்யவும் மற்றும் மாநிலத்தின் சுற்றுச்சூழல் தர ஆய்வுக்காகவும், எட்டு மேம்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் மற்றும் எட்டு மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களை நிறுவியுள்ளது.

வாரியத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்குகிறது. இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) தலைமையில் எட்டு மண்டல அலுவலகங்களும் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் முப்பத்தி எட்டு மாவட்ட அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, ஈரோடு, திருப்பூர், சென்னை, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் 5 பறக்கும் படைகளும் செயல்பட்டு வருகின்றன.

2021-22 ஆம் ஆண்டில், கடலூரில் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகமும் மற்றும் சென்னை, சேலம் மற்றும் வேலூரில் பறக்கும் படைகளும் புதிதாக உருவாக்கப்பட்டன. மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் மணலி, மேட்டூர் மற்றும் இராணிப்பேட்டை போன்ற அதிக மாசடையும் பகுதிகளில் மூன்று உதவி

சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டன.

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் செயல்பாடுகள்**

- இசைவாணை வழங்குதல்
- நீர், காற்று மற்றும் ஒலி ஆகியவற்றின் சுற்றுச்சூழல் தரக் கண்காணிப்பு.
- கழிவு மேலாண்மை கண்காணிப்பு
- சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- பிற நடவடிக்கைகள்
- 2021–22 ஆண்டில் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள்
- நிலையான வளர்ச்சி இலக்குகள்

## 2.0. இசைவாணை வழங்குதல்


### 2.1. தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் வகைப்பாடு

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உத்தரவுகளின் அடிப்படையில், தொழிற்சாலைகள் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை என மாசு

குறியீட்டு மதிப்பின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. மேலும் தொழிற்சாலைகளின் மொத்த நிலையான சொத்துக்களின் **(Gross Fixed Assets–GFA)** அடிப்படையில் தொழிற்சாலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

<table>
<tr><th rowspan="2">GFA அடிப்படை யிலான வகை</th><th rowspan="2">GFA (கோடி யில்)</th><th colspan="4">மாசுபடுத்தும் தன்மையை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு</th></tr>
<tr><th>சிவப்பு</th><th>ஆரஞ்சு</th><th>பச்சை</th><th>வெள்ளை</th></tr>
<tr><td>பெரிய வகை</td><td>> 10</td><td rowspan="3">அதிக மாசுபாடு</td><td rowspan="3">நடுத்தர மாசுபாடு</td><td rowspan="3">குறைவான மாசுபாடு</td><td rowspan="3">மாசுபடுத்தாதது</td></tr>
<tr><td>நடுத்தர வகை</td><td>5 – 10</td></tr>
<tr><td>சிறிய வகை</td><td>< 5</td></tr>
</table>

28.02.2022 அன்று வாரியத்தின் இசைவாணை முறையின் கீழ் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:–




**2.2. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்குவதற்கான அளவுகோல்கள்**

காற்று மற்றும் நீர் மாசுபாடு தொடர்பாக தொழிற்சாலைகளை கண்காணிப்பதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிறுவுவதற்கான

இசைவாணை மற்றும் இயக்குவதற்கான இசைவாணைகளை வழங்குகிறது. முதல் கட்டத்தில், 'நிறுவுவதற்கான இசைவாணை' (CTE) பிற அளவுகோல்களோடு தொழிற்சாலைகளின் அமைவிடம் குறித்த ஆய்வு செய்த பிறகு வழங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 30.03.1989 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசாணை எண். 213 –ன்படி, குறிப்பிட்டுள்ள நீர் நிலைகளிலிருந்து ஒரு கி.மீ தொலைவிற்குள்ளாகவும், 08.05.1998 நாளிட்ட அரசாணை எண் 127–ன்படி தமிழ்நாட்டின் முக்கிய ஆறுகளின் கரையிலிருந்து ஐந்து கிமீ தொலைவிற்குள்ளாகவும் மதிப்புறு நீர்நிலைகளைப் பாதுகாக்கும் முதன்மை நோக்கத்துடன் அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அமைவதை தடைசெய்கிறது. இரண்டாவதாக, நிறுவுவதற்கான இசைவாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்த பிறகு, தொழிற்சாலைகள் தங்கள் இயக்கத்தை

தொடங்குவதற்காக 'இயக்குவதற்கான இசைவாணை' **(CTO)** வழங்கப்படுகிறது.

சட்டங்கள் மற்றும் விதிகளை திறம்பட செயல்படுத்துதல் மற்றும் திறன்மிகு கண்காணிப்பிற்காக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தலைமை அலுவலகம், மண்டல அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலக அளவில் பல்வேறு குழுக்களை அமைத்துள்ளது. இந்தக் குழுக்கள் சீரான இடைவெளியில் கூட்டங்களை நடத்தி இசைவாணை வழங்குதல் குறித்து முடிவு செய்கின்றன.

24.02.2020 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்(சு.சூ.3) துறையின் அரசாணை எண் .21–ன்படி, காவிரி டெல்டா பகுதி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் (TANPAZ) என அறிவிக்கப்பட்டு, இப்பகுதியில் துத்தநாக உருக்கி, இரும்பு தாமிர உருக்கி, அலுமினியம் உருக்கி, எலும்பு கழிவுகள், விலங்குகளின் கொம்பு மற்றும் பிற உடல் பாகங்களை

பதப்படுத்துதல், தோல் பதனிடும் தொழிற்சாலை, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, நிலக்கரி படுகை மீத்தேன், ஷேல் வாயு மற்றும் ஷேல் வாயு போன்ற ஹைட்ரோகார்பன்கள் தொடர்பான ஆய்வு மற்றும் எடுத்தல், கப்பல்களை உடைக்கும் தொழிற்சாலைகள் போன்றவற்றை தடை செய்துள்ளது.

**2.3. இணையவழி மூலம் இசைவாணை வழங்குதல்**

தமிழ்நாடு அரசின் மின்–ஆளுமை முன்முயற்சியின் ஒரு பகுதியாகவும், வாரியம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இடையே ஆரோக்கியமான மற்றும் செயல்திறன் மிக்க தொடர்பினை வழங்கும் நோக்கில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் "கணினி வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (OCMMS)" என்ற இணைய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. 19.01.2015 முதல் இந்த அமைப்பு இசைவாணை வழங்குவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் விரைவுத் தன்மையைக் கொண்டுவந்துள்ளது, தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு

இசைவாணை / இயக்க இசைவாணை / இசைவாணை புதுப்பித்தல் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை இணைய வழியில் சமர்ப்பித்தல், ஆவணங்களைச் சமர்ப்பித்தல், இசைவாணை கட்டணங்களை இணைய வழியில் செலுத்துதல், விண்ணப்பங்களின் நிலையை அறிதல் மற்றும் இணைய வழி மூலம் விளக்கங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றிற்கு இந்த செயலி உதவுகிறது. OCMMS மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதில் தொழிற்சாலைகளுக்கு உதவ, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தலைமை அலுவலகத்திலும் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் 'உதவி மையத்தை' அமைத்துள்ளது.

நிறுவுவதற்கான இசைவாணை மற்றும் இயக்குவதற்கான இசைவாணை தவிர, தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகள், உயிரி மருத்துவக் கழிவுகள், திடக்கழிவுகள், மின்–கழிவுகள், கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகள், நெகிழி

கழிவுகள் மற்றும் மின்கலக் கழிவுகளைக் கையாள்வதற்கான அங்கீகாரம், தொழிற்சாலைகளுக்கு இணைய வழியில் வழங்கப்படுகின்றன. இது தொடர்பான தரவுகள் வாரியத்தின் இணையதளத்தில் பதிவேற்றப்படுகிறது.

- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA)–ன் கீழ் வரும் திட்டங்களுக்கு ஏழு ஆண்டுகள் செல்லுபடியாகும் விதத்திலும் மற்றும் அதன் கீழ் வாராத திட்டங்களுக்கு முறையே ஐந்து ஆண்டுகள் செல்லும்படியாகும் விதத்திலும் நிறுவுவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது.
- சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழிற்சாலைகளுக்கு முறையே 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் மற்றும் 14 ஆண்டுகள் வரை செல்லுபடியாகும் விதத்தில் தகுதியுள்ள தொழிற்சாலைகளுக்கு இயக்குவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது.

- 13.01.2020 நாளிட்ட வாரிய செயல்முறை ஆணை எண். 1–ன் படி, நகர மற்றும் ஊரமைப்பு இயக்குனரகம் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் / உள்ளூர் திட்டக் குழுமம் மூலம் அமைக்கப்பட்டுள்ள தொழில்துறை பயன்பாட்டு மண்டலம் / தொழிற்பேட்டையில் தொழிற்சாலைகள் அமைக்க முன்மொழியப்பட்ட பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு இயக்குவதற்கான இசைவாணையை வாரியம் நேரடியாக வழங்குகிறது.
- மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி, தொழிற்சாலைகளுக்கு எளிதாக தொழில் செய்ய ஏதுவாக இயக்குவதற்கான இசைவாணை / இசைவாணை புதுப்பித்தல் போன்றவற்றை ஒவ்வோர் ஆண்டும்

வழங்குவதற்கு பதிலாக 08.10.2021 நாளிட்ட சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (சு.சூ.1) துறையின் அரசாணை எண்.144–ன்படி ஒரே தொகுப்பாணையாக வழங்கப்படுகிறது.

**2.4. தானியங்கு இசைவாணை புதுப்பித்தல்**

சிவப்பு–சிறிய மற்றும் அனைத்து ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழில்களுக்கான 'தானியங்கு புதுப்பித்தல்' என்ற முறையை வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, தொழிற்சாலைகள் சுய சான்றிதழை அளித்தவுடன், ஆய்வு இல்லாமல், தொழிற்சாலைகளுக்கு இசைவாணை புதுப்பிக்கப்படுகிறது. இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (OCMMS) மூலம் விண்ணப்பத்தைப் பெற்ற ஏழு நாள்களுக்குள் இசைவாணை புதுப்பிக்கப்படுவதை இது உறுதி செய்கிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 'தானியங்கு புதுப்பித்தல்' மூலம் நிறுவுவதற்கான

இசைவாணையிலும் கால அளவினை நீட்டித்து வழங்குகிறது.

**01.04.2021 முதல் 31.03.2022 வரை தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட நிறுவுவதற்கான, இயக்குவதற்கான மற்றும் புதுப்பித்தலுக்கான இசைவாணை விவரம்**

| **வகைகள்** | **சிவப்பு** | **ஆரஞ்சு** | **பச்சை** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| நிறுவதற்கான இசைவாணை | 249 | 519 | 235 | 1003 |
| இயக்குதல் (மற்றும்) புதுப்பித்தல் இசைவாணை | 3365 | 5856 | 2062 | 11283 |

### 3.0. நீர், காற்று மற்றும் ஒலி தர கண்காணிப்பு

சுற்றுச்சூழல் மாசினைக் குறைப்பதற்கும், சுற்றுச்சூழல் சார்ந்த கொள்கைகளில் மாற்றங்கள் செய்யவும் சுற்றுச்சூழல் தர கண்காணிப்பு மற்றும் தரவு உருவாக்கம் ஆகியவை மிகவும் அவசியமாகும். நீர் மற்றும் காற்று சார்ந்த சட்டங்களின் கீழ், வரையறுக்கப்பட்ட செயல்பாட்டின் அடிப்படையில் வாரியம், மாநிலத்தின் நீர், காற்று, ஒலி ஆகியவற்றின்

தரத்தினை பல்வேறு திட்டங்களின் வாயிலாக தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

### 3.1. காற்றுத்தர கண்காணிப்பு மற்றும் நீர் தர கண்காணிப்பு மையம்

சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் காற்றுத் தரக் கண்காணிப்பு மையம் இயங்குகிறது. இம்மையத்தின் முக்கிய நோக்கம், தொழிற்சாலைகளின் புகை போக்கியிலிருந்து வெளியேறும் மாசினையும் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரத்தினையும் 24x7 கால அளவில் தொடர்ந்து கண்காணிப்பதாகும். மிகுந்த மாசினை ஏற்படுத்தும் பெரிய தொழிற்சாலைகளான சிமெண்ட் தொழிற்சாலை, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், பெட்ரோகெமிக்கல் தொழிற்சாலைகள், அனல் மின் நிலையங்கள், உரத் தொழிற்சாலைகள், இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள் மற்றும் பிற தொழிற்சாலைகள் அனைத்தும் இம்மையத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. இந்த தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் மாசு,

நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக இருப்பின், உரிய தொழிற்சாலைகளுக்கு உடனடி குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் செய்திகள் அனுப்பப்படுவதுடன், குறைகளை களையும் பொருட்டு அந்தந்த பகுதியில் உள்ள இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோருக்கும் தகவல் தெரிவிக்கப்படுகிறது. இதுவரை புகை போக்கியில் வெளியேறும் காற்றின் தரத்தைக் கண்காணிக்கும் பொருட்டு 405 தொழிற்சாலைகளும், சுற்றுச் சூழல் காற்றின் தரத்தைக் கண்காணிக்கும் பொருட்டு 154 தொழிலகங்களும் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து வாரியம், மேலும், நீர் தர கண்காணிப்பு மையம் ஒன்றையும் நிறுவி தம் செயல் பரப்பினை விரிவாக்கம் செய்துள்ளது. நிலத்தடி நீரை மாசுபடுத்தும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள், சர்க்கரை/ கரும்பு

ஆலைகள், பூச்சி கொல்லி மருந்து நிறுவனங்கள், ஆடை உற்பத்தி நிறுவனங்கள், எரிசாராயத் தொழிற்சாலைகள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவை இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரம் நிகழ் நேர அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது. தற்பொழுது 360 தொழிற்சாலைகள், இம்மையத்துடள் இணைக்கப்பட்டு, இதன் கண்காணிப்பு தரவு அறிக்கை வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

### 3.2. நீர் மாசு கண்காணிப்பு முறைகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் அன்றாட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளைக் கண்காணித்து வருகிறது. மேலும், அன்றாட கழிவுநீர் மற்றும் தொழிற்கழிவுநீர், நிலம், நீர்நிலைகள் மற்றும் கடலில் வெளியேற்றப்படும் முன் வாரியம்

நிர்ணயித்துள்ள தர அளவிற்கு சுத்திகரிக்கப் படுவதையும் கண்காணிக்கிறது.

### 3.2.1. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளின் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும், வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவீடுகளைக் கடைபிடிப்பதில் அவற்றுக்கு ஏற்படும் இடர்களையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் இத்தகைய தொழிலகங்களில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான ஒரு புதுமையான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்வதற்கு, பொது சுத்திகரிப்பு வசதிகளை ஏற்படுத்த வழிவகை செய்கிறது. நம் மாநிலத்தில் சிறு முதலீட்டு தொழிற்சாலைகள் தொகுப்பாக அமைந்துள்ள இடங்களில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உறுதுணையாக உள்ளது. இது தவிர, வாரியமானது இத்திட்டத்திற்கான திட்ட

அறிக்கையின் மீது தொழில்நுட்பக் கூர்ந்தாய்வு மேற்கொள்வதற்கான உதவிகளையும் வழங்குகிறது.

**தமிழ் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு:**

| வ. எண் | தொழிற்சாலை வகை | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 13 |
| 2 | துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 19 |
| 3 | மின் முலாம் பூசும் தொழிற்சாலைகள் | 2 |
| 4 | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 |
| 5 | மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள் | 1 |
| | மொத்தம் | 36 |

மேற்குறிப்பிட்ட, 19 துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தவிர, மேலும் 10 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் புதிதாக ஏற்படுத்துவதற்கான இசைவாணையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்கியுள்ளது.

மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசின் மாண்புமிகு ஜல்சக்தி துறையின் இணை அமைச்சர் அவர்களை, 31.03.2022 அன்று நேரில் சந்தித்து 'நடந்தாய் வாழி காவேரி' திட்டத்தின் கீழ் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான ஒன்றிய அரசின் நிதி உதவி அளித்திட கோரியுள்ளார்.

### 3.2.2. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிலை

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் உருவாக்கப்பட்டுள்ள அனைத்து கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் சிவப்பு வகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம், பேரூராட்சி இயக்ககம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரிடம் பெறப்பட்ட புள்ளி விபரங்களின்படி அறிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தேசிய கங்கை தூய்மைத் திட்டத்திற்கு அனுப்பியுள்ளது. இதன்படி, 76 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன, 39 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. மேலும் 37 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க முன்மொழியப்பட்டுள்ளன. இதில் 59 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் வாரியத்தின் இயக்குவதற்கான இசைவாணையுடன்

இயங்குகின்றன. மேலும் 41 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கான இசைவாணை வழங்கப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடை அமைக்கப்படாத பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை உருவாக்கவும், சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் நிலத்தில் கலக்காமல் இருப்பதை உறுதி செய்யவும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம், பேரூராட்சி ஆணையரகம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர்களுக்கு செயல்முறை ஆணையை வாரியம் வழங்கியுள்ளது. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதலின்படி நிகழ்நேர கழிவுநீர் கண்காணிப்பு அமைப்புகள் நிறுவவும் மற்றும் அலைபேசி செயலியைப் பயன்படுத்தவும் செயல்முறை ஆணையை வாரியம் வழங்கியுள்ளது.

### 3.3. நீர் நிலைகள் கண்காணிப்பு

### 3.3.1. தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ், நான்கு முக்கிய நதிகளான காவிரி, தாமிரபரணி, பாலாறு, வைகை மற்றும் எட்டு பெரிய ஏரிகளான உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், போரூர், பழவேற்காடு, பூண்டி, செங்குன்றம் ஆகியவற்றின் நீரின் தரத்தினை ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய நிதி உதவியுடன் கண்காணித்து வருகின்றது. மொத்தம் 72 இடங்களில் நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, ஆய்வுக்கு உட்படுத்தி அதன் அறிக்கை வாரிய இணைய தளத்தில் வெளியிடப்படுகிறது.

மாநிலத்தில், நிலத்தடிநீர் மாசு அடைய வாய்ப்புள்ள முக்கியமான இடங்களில் நிலத்தடி நீரின் தன்மையைக் கண்காணிக்கும் பொருட்டு, வாரியம் 2020 முதல் ஈரோடு, நாமக்கல், சேலம், கரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி,

திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 18 இடங்களில் மாதந்தோறும்/ஆறுமாதங்களுக்கு ஒரு முறையும் நீர் மாதிரிகள் எடுத்து, பகுப்பாய்வில் அறியப்படும் விவரங்கள் வாரிய இணையதளத்தில் பொது மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு பதிவேற்றம் செய்யப்படுகிறது.

### 3.3.2. தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டம்

தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், மாநிலத்தில் உள்ள நதிநீர் மாசுபடுவதைக் கண்காணிக்க ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் (CPCB) அடையாளம் கண்டுள்ள, 51 நிலையங்களில் நதிநீரின் தரம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாகக் கிடைக்கப்பெறும் தரவுகள் வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

### 3.3.3. சென்னை நீர் வழிகள் கண்காணிப்புத் திட்டம்

சென்னையில் அடையாறு, பக்கிங்காம் கால்வாய், கூவம், ஓட்டேரி கால்வாய் ஆகிய முக்கிய நீர் வழிகள் உள்ளன. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இந்நீர்

வழிகளின் தரத்தினைக் கண்காணிக்கும் வகையில் மொத்தம் 19 இடங்களில் மாதந்தோறும் நீர் மாதிரிகள் எடுத்து கண்காணித்து வருகிறது. இந்த ஆறுகளைப் புதுப்பிக்க அரசு, "சென்னை நதி மறுசீரமைப்பு அறக்கட்டளை" என்ற சிறப்பு கண்காணிப்புக் குழுவை உருவாக்கியுள்ளது.

### 3.3.4. மாசடைந்த நதிப் பகுதிகள்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம், தேசிய நீர் தர கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், நாடு முழுவதும் 302 நதிப்பகுதிகளை மாசடைந்த பகுதிகள் என அறிவிப்பு செய்துள்ளது. அவற்றில் ஆறு நதிப்பகுதிகள் தமிழ்நாட்டில் உள்ளன. அவை காவிரி, பவானி, சரபங்கா, திருமணிமுத்தாறு, வசிஷ்டா மற்றும் தாமிரபரணி ஆறுகள் ஆகும்.

நதிகள் மாசு அடைவதற்கு, சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் மற்றும் திடக்கழிவுகளை நீர்நிலைகளில் வெளியேற்றுவதே முக்கியக் காரணம் என

கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி நதிப்பகுதிகளை மீட்க ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையின் முக்கிய அம்சமாக நகர பகுதிகளில் பாதாள சாக்கடை அமைத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை வசதி ஏற்படுத்துதல், தொகுப்பாக உள்ள சிறிய வகை தொழிற்சாலைகளுக்கு பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்ற செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இத்திட்டங்கள் தொடர்பான பணிகள், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நகர்ப்புற ஊராட்சி ஆணையரகம், பொதுப்பணித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஏற்கனவே இயங்கி வருகின்ற 14 தொடர் நீர் கண்காணிப்பு நிலையங்களை ஆய்வு செய்ததில், நிரந்தர நீரோட்டம் உள்ள தாமிரபரணி ஆற்றில் உள்ள மூன்று தொடர் நீர் கண்காணிப்பு நிலையங்களைத் தொடர்ந்து இயக்கவும் மற்ற 11 தொடர் நீர் கண்காணிப்பு மையங்களில் உள்ள நீர் நிலைகளில் நீரோட்டம் தொடர்ந்து இல்லாத காரணத்தினால், மாதாந்தர மாதிரிகள் சேகரித்து ஆய்வுக்கு உட்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.4. சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு

#### 3.4.1. தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாநிலத்தில் மொத்தம் 28 இடங்களில் அதாவது சென்னை (8), கோயம்புத்தூர் (3), மதுரை (3), சேலம் (1), திருச்சி (5), தூத்துக்குடி (3), மேட்டூர் (2) கடலூர் (3) ஆகிய நகரங்களில் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதலின் படி, வாரத்திற்கு இரண்டு மாதிரிகள்

என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 104 மாதிரிகள் சேகரித்து நுண்துகள்கள்($PM_{10}$ மற்றும் $PM_{2.5}$ ), சல்பர் டை ஆக்ஸைடு ($SO_2$) மற்றும் நைட்ரஜன் டை ஆக்ஸைடு ($NO_2$) ஆகிய காரணிகள் கண்காணிக்கப்படுகிறது. கூர்நோக்கின் அடிப்படையில் காற்று தர குறியீட்டு எண் கணக்கிடப்பட்டு, அவை வாரிய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

மேலும் இத்திட்டத்தினை பிற மாவட்டங்களிலும் உள்ள நகர் பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் வகையில், வாரியம் மேலும் எட்டு மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு மூன்று நிலையங்கள் என மொத்தம் 24 நிலையங்களை தருமபுரி, கன்னியாகுமரி, பெரம்பலூர், சிவகங்கை, திருவாரூர், தேனி, விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் நிறுவி, அக்டோபர் 2021 முதல் செயல்படுத்தி வருகிறது. தற்சமயம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தில் மொத்தம் 52 நிலையங்களை தேசிய

காற்று தர கண்காணிப்பு திட்டத்தின் மூலம் நிறுவியுள்ளது.

### 3.4.2. சுற்றுப்புறக் காற்று தர தொடர் கண்காணிப்பு நிலையங்கள்

நகர்மயமாதலும் தொழில் மயமாதலும் காற்றுத் தரத்தின் மீது நேரடியான முதன்மையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சுற்றுப்புறக் காற்றுத் தர கண்காணிப்பை வலுப்படுத்தவும், காற்று தரக் குறியீடு (Air Quality Index) நிகழ்நேர அடிப்படையில் கணக்கிடும் வகையிலும் வாரியம் ஏற்கனவே 34 இடங்களில் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையங்களை அமைத்து இயக்கி வருகின்றது. இந்நிலையங்கள் மூலம் காற்றில் கலந்துள்ள நுண்துகள்கள்($PM_{10}$ மற்றும் $PM_{2.5}$), சல்பர் டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு, அமோனியா, ஓசோன், கார்பன் மோனாக்ஸைடு, பென்சீன், டொலுவின் மற்றும் சைலீன் ஆகிய காரணிகள் கண்காணிக்கப்படுகிறது.

இவற்றில் இருந்து பெறப்படும் காற்று தர குறியீடு எண் (AQI), அந்தந்த நிலையங்களில் உள்ள காட்சி பலகையிலும் மற்றும் வாரிய இணையதளத்திலும் வெளியிடப்படுகிறது. இது தவிர வாரியத்தில் ஒரு நடமாடும் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையம் இயக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நகரங்களின் முக்கிய இடங்களில் தீபாவளி, போகிப்பண்டிகை போன்ற விழாக்காலங்களிலும் மற்றும் பொது மக்கள் புகார்கள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகளின்படியும் காற்று தர ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 25 இடங்களில், புதிய தொடர் காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்களை 2022–23–ம் ஆண்டில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**3.4.3. காற்று தரக் குறியீட்டினை எட்டாத நகரங்கள்**

தேசிய காற்று தரக் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில், காற்றில் நுண் துகள்களின் ($PM_{10}$)

,அளவீடானது நாடு முழுவதும் மொத்தம் 132 நகரங்களில் ஆண்டு தரக் குறியீடான 60 $\mu g/m^3$ என்ற அளவை விட அதிகமாக உள்ளதால் அவற்றைச் சராசரி தரக் குறியீட்டினை எட்டாத நகரங்கள் என ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் வகைப்படுத்தியுள்ளது. நுண்துகள்கள், தர நிர்ணய அளவுகளை விட அதிகமாக இருப்பதற்கு வாகனப் போக்குவரத்து, சாலைகளில் புழுதி மேல் எழும்புதல், திடக் கழிவுகளை எரித்தல், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுதல், குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்களில் பயன்படுத்தப்படும் எரி பொருட்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் காற்று மாசு ஆகியவை காரணங்கள் ஆகும். தமிழ்நாட்டில் தூத்துக்குடி, திருச்சி, மதுரை மற்றும் சென்னை நகரங்கள் காற்று தரக் குறியீட்டினை எட்டாத நகரங்கள் வரிசையில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்நகரங்களில் காற்றுத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, தொடர்புள்ள துறைகளான பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பொதுப்பணித் துறை, போக்குவரத்துத் துறைகள் மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தரக்குறியீட்டினை எட்டாத நகரங்கள் மற்றும் பத்து லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் காற்றுத் தரத்தினை மேம்படுத்துவதற்கு ஒன்றிய அரசு, தேசிய தூய்மை காற்றுத் திட்டத்தின் கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது.

### 3.5. சுற்றுப்புற ஒலி அளவு கண்காணிப்புத் திட்டம்

தேசிய சுற்றுப்புற ஒலி அளவு கண்காணிப்பு வளையத் திட்டத்தின் கீழ், தேசிய மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை மாநகரில் அமைதிப் பகுதிகள், குடியிருப்புப் பகுதிகள், தொழிலகப் பகுதிகள் ஆகியவற்றில் 10 இடங்களில் நிகழ்நேர சுற்றுப்புற ஒலி

மாசு கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. சென்னையில் எழும்பூர், தியாகராயநகர், பெரம்பூர், கிண்டி, திருவல்லிக்கேணி, பள்ளிக்கரணை, வேளச்சேரி, வண்ணாரப்பேட்டை, அண்ணாநகர், சவுகார்பேட்டை ஆகிய இடங்களில், சுற்றுப்புற ஒலி அளவினை தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகளை பொருத்தி, ஒலி அளவினை பதிவு செய்து வருகின்றது. இத்தகவல்கள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

### 4.0. கழிவு மேலாண்மை கண்காணிப்பு

### 4.1. மருத்துவக் கழிவு மேலாண்மை

மனிதர்கள் மற்றும் விலங்குகளின் நோய் அறிவதற்கான பரிசோதனையின் போது வெளிப்படும் கழிவுகள், சிகிச்சை மற்றும் தடுப்பூசி அதன் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கையின் போது வெளியேறும் கழிவுகள், உயிரியல் ஆய்வகங்களில் தயாரிப்பு அல்லது பரிசோதனையில் வெளியேற்றப்படும் கழிவுகள் ஆகியவை மருத்துவக் கழிவுகள் ஆகும்.

மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் படி, மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து, சுத்திகரிப்பு செய்து அகற்றுவது, மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் அனுமதிக்கப்பட்ட பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை நடத்துவோர் ஆகியோரின் பொறுப்பாகும். மருத்துவமனைகள் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு இணைய வழி மூலம் வாரியம் ஏற்பாணை வழங்குகிறது, மேலும் வாரியம் இவ்விதிகளின் படி பல்வேறு வரையறைகளைக் கடைபிடிப்பதை கண்காணிக்கிறது. இவ்விதிகள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க, அரசு, மாநில அளவில் ஆலோசனைக் குழு ஒன்றையும் அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில், இது வரை 26,827 படுக்கை மற்றும் படுக்கையில்லா தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கும், கால்நடை நிறுவனங்கள்,

நோய்குறி ஆய்வகங்கள் (Pathological Labs), இரத்த சேமிப்பு வங்கிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வாரியம், மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் படி ஏற்பாணை வழங்கியுள்ளது. இவ்வேற்பானது இசைவாணை முடிவடையும் காலம் வரை வழங்கப்படுகிறது.

**4.1.1. பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு வசதிகள்**

பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் மருத்துவக் கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்லுதல், சுத்திகரிப்பு மற்றும் அறிவியல் முறையில் அகற்றுவதற்காக செயல்படுகின்றன. 2020ஆம் ஆண்டில் மாநிலத்தில் மருத்துவக் கழிவுகளின் தினசரி சராசரி உற்பத்தி 36 டன்களாக இருந்தது. தமிழகத்தில் 10 பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. 10 பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளின் நாள் ஒன்றிற்கான மொத்த நிறுவப்பட்ட திறன் 90.35 டன்களாகும் (நாள்

ஒன்றிற்கான திறன் எரிப்பான் 56.5 டன், கிருமிகள் அழிப்பான் 33.85 டன்).

### 4.1.2. கோவிட்–19 மருத்துவக் கழிவு மேலாண்மை

மருத்துவமனைகள், தனிமைப்படுத்தப்பட்ட முகாம்கள், வீடுகள் / வீட்டு பராமரிப்பு வசதிகள், ஆய்வகங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளில் உருவாகும் கோவிட்–19 பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மருத்துவக் கழிவுகள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நெறிமுறைகளின்படி, இயக்கத்திலுள்ள 10 பொது மருத்துவக்கழிவுகள் சுத்திகரிப்பு நிறுவனங்களால் முறையாக சேகரித்து, சுத்திகரித்து அகற்றப்படுகின்றன. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கோவிட்–19 மருத்துவக் கழிவு மேலாண்மைக்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களின் படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அதிகளவில் உருவாகும் கோவிட்– 19 மருத்துவக் கழிவுகளைக் கையாள்வதற்காக, அனைத்து பொது மருத்துவ சுகாதார

நிலையங்களும் அதிக நேரம் செயல்பட அறிவுறுத்தியுள்ளது.

மேலும், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின் படி, கோவிட்–19 மருத்துவக் கழிவுகளை எரிப்பதற்கு கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை அமைப்பிலுள்ள எரிப்பானைப் பயன்படுத்துவதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

நாள்தோறும் சேகரித்து அகற்றப்படும் கோவிட்–19 மருத்துவக் கழிவுகளின் விவரங்கள் வாரியத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. ஜனவரி 2021 முதல் ஜனவரி 2022 வரை, சராசரியாக தினசரி கோவிட்–19 மருத்துவக் கழிவுகளின் உற்பத்தி அளவு 9.5 டன்களாகும்.

**4.2. திடக்கழிவு மேலாண்மை**

வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் நடவடிக்கைகளால்

உருவாகின்ற மக்கும் மற்றும் மக்காத கழிவுகள் திடக்கழிவுகளில் அடங்கும். திடக்கழிவு மேலாண்மை விதிகள், திடக்கழிவுகளை சேகரித்தல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றுதல் ஆகியவற்றில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்ள பொறுப்பினை வரையறுத்துள்ளது. தமிழ்நாட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நாளொன்றிற்கு 5 டன்களுக்கு மேல் திடக்கழிவுகளை உற்பத்தி செய்யும் மொத்தம் 219 உள்ளாட்சி அமைப்புகளுக்கு திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி ஏற்பாணை வழங்கியுள்ளது.

நகராட்சியின் திடக்கழிவுகள் நீர்நிலைகளின் அருகில் கொட்டப்படுவதை தடுக்கும் பொருட்டு, தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை

ஆகியோர் திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 செயல்படுத்துப்படுவதை தனிப்பட்ட விதத்தில் மதிப்பாய்வு செய்து, மாநிலத்தில் திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கான செயல் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு, மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாயம், வழக்கு எண்.95/2021 மற்றும் 30/2020–இல் தனது 31.03.2022 தேதியிட்ட ஆணையில் உத்தரவிடப் பட்டுள்ளது.

திடக்கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டப்படுவதை தடுக்கவும், இதன் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும் சென்னை, வேலூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**4.2.1. குப்பை கிடங்குகளில் உயிரி நிலப்பரப்பு மீட்டெடுத்தல்**

உள்ளாட்சி அமைப்புகள் நெடுங்கால குப்பை கிடங்குகளில் உயிரி நிலப்பரப்பு மீட்டெடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலங்களை

மீட்டெடுக்க வேண்டும் என்று திடக்கழிவு மேலாண்மை விதிகள் வலியுறுத்துகின்றன. இதன்படி, உள்ளாட்சி அமைப்புகளால் தமிழகத்தில் 144 நெடுங்கால குப்பைக் கிடங்குகளில், குப்பைக் கழிவுகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு. அதில் 49 இடங்களில் பணிகள் நிறைவடைந்துள்ளன. எஞ்சியுள்ள 95 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 4.3. நெகிழி கழிவு மேலாண்மை

அதிகரித்து வரும் நகரமயமாக்கல், மக்கள் தொகை பெருக்கம் மற்றும் தொழிற்துறை வளர்ச்சி போன்ற காரணிகளால் நெகிழி கழிவுகளின் உற்பத்தி அதிகரித்து வருகின்றன, 2020–21 ஆம் ஆண்டு அறிக்கையின் படி, தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 505 பேரூராட்சிகளிலிருந்து நாளொன்றுக்கு உருவான நெகிழி கழிவுகள் சுமார் 1178 டன்கள் ஆகும். நெகிழி கழிவுகள் உள்ளாட்சி அமைப்புகள் மூலம்

சேகரிக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது. மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் மறுசுழற்சி செய்யும் தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்வதற்கும், மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலைகளில் மூலப் பொருளுடன் சேர்த்து எரிப்பதற்கும் அனுப்பப்படுகின்றன.

நெகிழி கழிவு மேலாண்மை விதிகளின்படி, வாரியம் 29 மக்கும் தன்மையுடைய நெகிழி பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கும், 230 நெகிழி கழிவு மறுசுழற்சி செய்யும் தொழிற்சாலைகளுக்கும், ஏற்பாணை வழங்கியுள்ளது.

### 4.3.1. ஒரு முறை பயன்பாட்டிற்குப் பிறகு தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்கள் மீதான தடை

தமிழக அரசு, 25.06.2018 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசாணை எண் 84-ல், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் சில வகை நெகிழி பொருட்களை தடிமன் வரைமுறையின்றி

பயன்படுத்த தடை அறிவித்தது. இத்தடையானது 01.01.2019 முதல் நடைமுறையிலுள்ளது.

**4.3.2. நெகிழி தடை ஆணையினை நடைமுறைப்படுத்துதல்**

தடை ஆணையைத் திறம்பட செயல்படுத்த, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து, மண்டல அளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மாவட்ட சுற்றுச்சூழல் குழுக் கூட்டங்கள், மாவட்டந்தோறும் பெருந்திரள் விழிப்புணர்வுப் பேரணிகள், சமூக ஊடகங்கள் மூலமாக விழிப்புணர்வு, தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் அறிவிப்புப் பதாகைகள் அமைத்தல் முதலிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**4.3.3. நெகிழி தடை மீதான அமலாக்கம்**

நெய்யப்படாத கைப் பைகள், நெகிழி கைப் பைகள், தண்ணீர்ப் பைகள் போன்ற தடை செய்யப்பட்ட நெகிழி உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதில் ஈடுபட்ட 170 தொழிற்சாலைகளை (ஜனவரி 2019

முதல் மார்ச் 2022 வரை) மூடவும் அவற்றின் மின் இணைப்புகளைத் துண்டிக்கவும் ஆணைகள் வழங்கப்பட்டன.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் பொதுமக்களின் பங்களிப்பாக அவர்களின் ஒத்துழைப்பை நாடவும், சட்டப்படி தடைசெய்யப்பட்ட நெகிழி உற்பத்திச் சாலைகள் பற்றிய தகவல் அளிப்போருக்கு வெகுமதி அளிக்கவும், அந்தந்த அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கு வாரிய மின்னஞ்சல் / கடிதம் / தொலைபேசி அழைப்புகள் / புலனம் (Whatsapp) வாயிலாகத் தகவல் தெரிவிக்கலாம் என்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 23.11.2021 அன்று ஒரு செய்திக்குறிப்பை வெளியிட்டுள்ளது, பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்களை உற்பத்தி செய்த 53 நெகிழி தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு வாரியத்தால் மூடப்பட்டன.

ஜனவரி 2019 முதல் மார்ச் 2022 வரை, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் மாநிலம் முழுவதும் தொடர் சோதனைகள் நடத்தப்பட்டு 1682 டன் தடைசெய்யப்பட்ட ஒரு முறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ரூ.1041 லட்சம் அபராதக் கட்டணமும் விதிக்கப்பட்டது.

### 4.3.4. நெகிழி தடை குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள்

**சிறப்பு வார கொண்டாட்டங்கள்**

2022 ஆம் ஆண்டை 75–ஆவது சுதந்திர தின ஆண்டாகக் குறிக்கும், சிறப்பு வார (2021 அக்டோபர் 04 முதல் 10 வரை) கொண்டாட்டங்களைக் கருத்தில் கொண்டு, 2022ஆம் ஆண்டிற்குள் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் நெகிழியை ஒழிக்க, வாரியம் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:–

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒரு முறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியப்படும் நெகிழியை படிப்படியாக

நீக்குவது குறித்த விளம்பரம் மற்றும் விழிப்புணர்வை உருவாக்கும் செய்திகளை வாரிய இணையதளத்தில் பதிவேற்றியுள்ளது (https://tnpcb.gov.in)

- வாரிய இணையத்தின் முகப்புப் பக்கத்தில், ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியைப் பயன்படுத்துவதை நிறுத்தவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களைப் பயன்படுத்தவும் பொது அறிவிப்பு (பொதுமக்களுக்கு வேண்டுகோள்) வெளியிடப்பட்டுள்ளது (https://tnpcb.gov.in)
- 1000க்கும் மேற்பட்ட சுவரொட்டிகள் மாநிலம் முழுவதும் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட அலுவலகங்கள், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வணிக நிறுவனங்கள் போன்றவற்றில் ஒட்டப்பட்டுள்ளன.

- அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளால், மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்கள், அதன் தீமைகள் மற்றும் தடை செய்யப்பட்ட நெகிழிக்கான மாற்றுகள் குறித்த சுற்றறிக்கைகள் / அறிவிப்புகள் / துண்டறிக்கைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியின் தீமைகள், ஒரு முறை பயன்பாட்டிற்குப் பிறகு தூக்கி எறியும் நெகிழி பொருட்கள் மீதான தடையை அமல்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் மற்றும் அதை அகற்ற மக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கோரி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் செய்திக் குறிப்பினை வெளியிட்டது.

- தடைசெய்யப்பட்ட நெகிழி பொருட்களை சேமித்தல், விநியோகம், கொண்டு செல்லுதல், விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றைத் தடுப்பதை உறுதிசெய்யும் பொறுப்பில் உள்ள மாவட்ட ஆட்சியர்களுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனைத்து மாவட்ட அதிகாரிகளும் டிசம்பர் 2021 இரண்டாவது வாரத்தில் விழிப்புணர்வுப் பரப்புரையை மேற்கொண்டனர். பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு பிரச்சாரமானது, வாகன பிரச்சாரம், பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் விநியோகம், மருத்துவமனைகள், உணவகங்கள், தொழிற்பேட்டைகள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையம், ரயில் நிலையம், திரையரங்குகள் போன்ற மக்கள் கூடும் பகுதிகளில் சுவரொட்டிகள் காட்சிப்படுத்துதல் போன்றவை

மேற்கொள்ளப்பட்டன. தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு பிரச்சாரம் குறித்த தொகுப்பு நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

**4.3.5. மக்கள் பிரச்சாரத்தை செயல்படுத்துதல் (மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம்)**

தமிழ்நாடு அரசு மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கும், ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியை ஒழிப்பதற்கும், 27.11.2021–ம் தேதியிட்ட சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் அரசாணை எண். 116–ல், பின்வரும் நான்கு செயல்திட்டங்களை அறிவித்துள்ளது:–

- மக்களிடையே தாக்கம் ஏற்படுத்தும் மற்றும் புதுமையான தகவல்தொடர்பு வழிமுறைகள் மூலம் நெகிழிக்கு எதிரான மக்கள் இயக்கத்தை ஆதரித்தல்.
- மாநிலம் முழுவதும் நெகிழி தடையை

அமல்படுத்துவது குறித்து பயனுள்ள கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலுக்கான கட்டமைப்பை வடிவமைத்தல்.

- பல்வேறு பயன்பாட்டாளர்களுடன் ஒருங்கிணைந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலைத்தகு மாற்று பொருட்களை வடிவமைத்து பிரபலப்படுத்துதல்.
- பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் அறிவுப் பகிர்வு மூலம் நெகிழி சார்ந்த பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை பெரிய அளவில் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகள், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் பிற நெகிழி பயன்பாட்டாளர்களுடன் இணைந்து செயல்படுதல்.

### 4.3.6. மாநில அளவில் மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம்

மஞ்சப்பை பிராச்சாரத்தின் நோக்கமானது பொது மக்களிடையே ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் தடை செய்யப்பட்ட நெகிழி பயன்பாட்டை நீக்குவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி சூழலுக்கு உகந்த மஞ்சப்பை போன்ற மாற்றுப் பொருட்களை மீண்டும் உபயோகத்திற்கு கொண்டு வருவதாகும்.

ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழியால் ஏற்படும் மாசுபாட்டைத் தடுக்கவும், பாரம்பரிய துணிப் பைகளை பயன்படுத்தவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23.12.2021 அன்று "மீண்டும் மஞ்சப்பை" என்ற மாபெரும் பிரச்சார நிகழ்வினை சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் அரங்கில் தொடங்கி வைத்தார். மேலும் நெகிழி பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழையிலை, பாக்கு மட்டை, நெல் உமி, சணல், களிமண் மற்றும் பனை ஓலையால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் மக்கும்

தன்மையுள்ள நெகிழி பைகள், துணியாலான விளம்பர பதாகைகள் மற்றும் அவற்றை தயாரிப்பதற்கான இயந்திரங்களை காட்சிப்படுத்தும் அரங்குகளையும், தயாரிப்பாளர்களின் கூடுதல் பொறுப்பு முயற்சிகள் சார்ந்த செயல்விளக்க அரங்கத்தினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். நெகிழி பயன்பாட்டின் தீய விளைவுகளை விளக்கும் குறும்படம் திரையிடப்பட்டு மக்கள் பாரம்பரிய துணிப்பைகளை (மஞ்சப்பை) பயன்படுத்துமாறும், ஒருமுறை பயன்படுத்தும் நெகிழி பொருள்களைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

### 4.3.7. மாவட்ட அளவில் மீண்டும் மஞ்சப்பை பரப்புரை

தூக்கி எறியப்படும் நெகிழிக்கு எதிரான மக்கள் இயக்கத்தை உருவாக்க, "மீண்டும் மஞ்சப்பை" பரப்புரை, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், வியாபாரிகள் சங்கம், வணிகர் சங்கம், சமூகக் கழகங்கள், குடிமக்கள் அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழிற்சாலைகள் எனப்

பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைவரையும் உள்ளடக்கி, மாவட்ட அளவில் நடத்தப்படுகிறது.

**4.3.8. மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு நடவடிக்கைகள்**

- பொதுமக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பிரபல நடிகர் தோன்றும் விளம்பரம் மற்றும் குறும்படம் பகுதி I & II தயாரிக்கப்பட்டது.
- மாநிலம் முழுவதும் உள்ள முன்னணி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் "மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரம் தொடங்குவது குறித்த விளம்பரங்களுடன் பெருமளவிலான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.
- பிரச்சாரம் தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு முன்னணி தொலைக்காட்சிகளில் விளம்பரப் படம் வெளியிடப்பட்டது
- 23.12.2021 முதல் முன்னணி தொலைக்காட்சிகளில் குறும்படமான பகுதி–1 வெளியாகி தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டது.

- மஞ்சப்பையின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வின் முன்னேற்றத்தை மேலாய்வு செய்வதற்காக பொங்கலுக்கு பிறகு குறும்படம் பகுதி–2 வெளியிடப்பட்டது.
- மாநில அளவிலான பிரச்சாரத்தின் போது சுமார் 3000 மஞ்சப்பைகள் பத்திரிகையாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டன.
- துணிப் பைகளைப் பயன்படுத்துவது மற்றும் ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிகளுக்கு மாற்று பொருட்கள் குறித்த விழிப்புணர்வு தொடர்பான ஒலி வடிவ செய்திகள் பண்பலை வானொலிகள் மூலம் 23.12.2021 முதல் தொடர்ந்து ஒலிபரப்பப்பட்டது.
- துணிப்பைகளை பயன்படுத்துதல் / ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிக்கு மாற்று பொருட்களை பயன்படுத்துதல் குறித்த பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்து முன்னரே

இளைஞர்களிடையே "மீண்டும் மஞ்சப்பை" என்ற சமூக ஊடகப் பிரச்சாரம் – பேஸ்புக், இன்ஸ்டாகிராம், ட்விட்டர் மற்றும் லிங்க்டுஇன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

- "மீண்டும் மஞ்சப்பை" என்ற சிறப்புப் பக்கம் பேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிவிட்டர் மற்றும் லிங்க்டுஇன் ஆகியவற்றில் உருவாக்கப்பட்டது.

### 4.3.9. மாநில அளவிலான சிறப்புப் பணி குழு

ஒருமுறை பயன்படுத்தும் நெகிழி பொருட்கள் மீதான தடையை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பதற்காக, 07.02.2022 நாளிட்ட சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் அரசாணை எண். 25–ன்படி அரசு மாநில அளவிலான சிறப்புப் பணிக்குழுவை, தலைமைச் செயலர் தலைமையிலும், மாவட்ட அளவிலான பணிக்குழுவை மாவட்ட ஆட்சியர் தலைமையிலும் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சிப் பகுதிக்கான

பணிக்குழுவை ஆணையர் தலைமையிலும் அமைத்துள்ளது. மாநில அளவிலான சிறப்புப் பணிக்குழுவின் முதல் கூட்டம் 05.03.2022 அன்று நடைபெற்றது. தமிழகம் முழுவதும் மாபெரும் வெற்றியை அடைவதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ள அனைத்து சம்பந்தப்பட்ட துறைகளும் சீரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**4.3.10. தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியை ஒழிப்பதற்கான மாநில செயல் திட்டம்**

தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியை ஒழிப்பதற்கும், திருத்தப்பட்ட நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் கீழ் நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கும் மாநில செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 4.4. கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை

கட்டுமானம் மற்றும் இடிமான (C&D) கழிவுகள், மறுசுழற்சி மதிப்பைக் கொண்ட கான்கிரீட், பிளாஸ்டர், உலோகம், மரம், நெகிழி போன்ற மக்காத பொருட்களைக் கொண்டுள்ளது. கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள், உள்ளாட்சி அமைப்புகள், கட்டுமான மற்றும் இடிமான கழிவுகளை முறையான மேலாண்மையை உறுதி செய்ய வேண்டும் என கூறுகிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருப்பூர் போன்ற பெரிய மாநகராட்சிகள் இத்தகைய செயலாக்க வசதிகளை அமைக்க முன்வந்துள்ளன. சென்னை பெருநகர மாநகராட்சியில், கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கிடங்கில் நாளொன்றிற்கு தலா 400 டன் திறன் கொண்ட இரண்டு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை பெருநகர மாநகராட்சி, கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளைப்

பெறுவதற்காக 15 மண்டலங்களில் சேகரிப்பு மையங்களை நிறுவியுள்ளது.

## 4.5. மின் கழிவு மேலாண்மை

மின் கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் படி, நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (Extended Producer Responsibility)–ன் கீழ், மின் மற்றும் மின்னணு உபகரணங்களின் உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளின் பயன்பாட்டிற்கு பிறகு உருவாகும் மின்கழிவுகளை சேகரித்து அனுப்புவதற்கு பொறுப்பாவார்கள். மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம், உற்பத்தியாளருக்கு நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புக்கான அங்கீகாரத்தை வழங்குகிறது மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மின் கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் விதிகளை நடைமுறைபடுத்துகின்றது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உற்பத்தியாளர்கள், அகற்றுபவர்கள், மறுசுழற்சி செய்பவர்கள் மற்றும் புதுப்பிப்பவர்கள் ஆகியோருக்கு

அங்கீகாரத்தை வழங்கி அதை தங்கள் வலைதளத்தில் பதிவேற்றம் செய்கிறது.

சென்னையில் உள்ள தேசிய உற்பத்தித்திறன் கவுன்சில் (NPC) தமிழ்நாட்டில் மின்னணுக் கழிவுக் கண்டுபிடிப்பை மேற்கொண்டு மாநிலத்தில் உள்ள உற்பத்தியாளர்கள், அகற்றுபவர்கள், மறுசுழற்சி செய்பவர்கள் மற்றும் புதுப்பிப்பவர்களின் பட்டியலை சமர்ப்பித்தது.

சென்னையில் உள்ள தேசிய உற்பத்தித் திறன் கவுன்சில் (NPC), தமிழகத்தில் மின் கழிவுகள் உற்பத்தியின் அளவு குறித்து மேற்கொண்ட ஆய்வறிக்கையில் 2020–ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மொத்த மின் கழிவுகளின் அளவு எடையின் அடிப்படையில் 4,00,482 மெட்ரிக் டன்னாக உள்ளது. இந்த கழிவுகள் 2030–ஆம் ஆண்டில், 5,78,356 மெட்ரிக் டன்னாக உயரும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மொத்த (Stake Holders) பங்குதாரர்கள் 8831 (மின்னணு சாதன உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், மின்னணு சாதன உதிரிப் பொருட்கள் தயாரிப்போர், மொத்த நுகர்வோர்கள், பழுதுபட்ட மின்னணு சாதனங்கள் புதுப்பிப்பவர்கள், சேகரிப்பு மையங்கள் மற்றும் மறுசுழற்சி செய்பவர்கள்), அடையாளம் காணப்பட்டு பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. பட்டியலில் குறிப்பிடப்பட்ட அனைத்து பங்குதாரர்களையும் வாரியத்தின் வரையறைக்குள் கொண்டு வந்து அனைத்து மின்னணு கழிவுகளை விஞ்ஞான முறையில் சுத்திகரித்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 4.6. தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மேலாண்மை

தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016-ன் கீழ் உள்ள பிரிவுகளின் அடிப்படையில் தீங்கு விளைவிக்கும் கழிவுகள்

மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது. 2020–2021–ம் ஆண்டில் உற்பத்தியான 7.95 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் கழிவுகளில், 0.85 இலட்சம் டன் (10.69%) கழிவுகள் நிலத்தில் பாதுகாப்பாக கொட்டப்படக்கூடிய கழிவுகளாகவும், 1.24 இலட்சம் டன் (15.59%) கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுபவையாகவும், 5.76 இலட்சம் டன் (72.52%) பயன்படுத்தக் கூடியவையாகவும் மற்றும் 0.095 இலட்சம் டன் (1.19%) கழிவுகள் எரிப்பான் மூலமாக எரிக்கப்படுபவையாகவும் அமைந்துள்ளன. தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்புமின்றி விஞ்ஞான முறையில் பாதுகாப்பாக கையாளுவதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது.

**4.6.1. சிமெண்ட் தொழிற்சாலைகளில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் இணை செயலாக்கம்**

தீங்கு விளைவிக்கும் கழிவுகளை சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கம் மூலம்

பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக உள்ளது. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில், சிமெண்ட் சூளைகளில் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் இதர கழிவுகளை இணை செயலாக்கத்திற்கான (Co–Processing) மாற்று மூலப்பொருளாகவோ அல்லது எரிசக்தி மீட்புக்கான மாற்று எரிபொருளாகவோ குறிப்பிட்ட அளவுகோல்களுக்கு உட்பட்டு பயன்படுத்த வாரியம் அனுமதித்துள்ளது. தீங்கு விளைவிக்கும் கழிவு விதிகள், 2016–ன் கீழ் ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 18.52 இலட்சம் டன் கழிவுகளை செயலாக்கம் செய்ய, 12 சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டில் சுமார் 1.7 இலட்சம் டன் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கழிவுகள் சிமெண்ட் ஆலைகளில் இணை செயலாக்கத்திற்கென பயன்படுத்தப் பட்டுள்ளன.

**4.6.2. தீங்கு விளைவிக்கும் கழிவுகளை முன் செயலாக்க செய்யும் வசதிகள் கொண்ட நிறுவனங்கள் (Hazardous waste pre–processing facilities)**

சிமெண்ட் தொழிற்சாலைகளில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை இணை செயலாக்கம் மூலம் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக, தீங்கு விளைவிக்கும் கழிவு முன்–செயலாக்க வசதிகளுக்கு, அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் இணை செயலாக்கத்திற்கு ஏற்றவாறு தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் கலவையை உருவாக்குகிறது. இக்கலவை சிமெண்ட் தொழிற்சாலைகளில் மூலப்பொருளுக்கு மாற்றாக அல்லது எரிபொருளுக்கு மாற்றாக பயன்படுத்தப்படுகிறது. இந்த வசதிகள் 2020–2021–ம் ஆண்டில் 0.32 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகளை முன்கூட்டியே செயலாக்கி, சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கத்திற்கு அனுப்பியுள்ளன.

**4.6.3. தீங்கு விளைவிக்கும் கழிவுகளால் பாதிக்கப்பட்ட இடங்களின் மறுபுனரமைப்பு**

- இராணிப்பேட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் உள்ள தி/ள். தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம் 1995–ஆம் ஆண்டு உற்பத்தியினை நிறுத்தியது. இத்தொழிற்சாலையின் இயக்கத்தின்போது வெளியேற்றப்பட்ட சுமார் 2.2 லட்சம் டன் குரோமியம் கலந்த திடக்கழிவுகள் இத்தொழிற்சாலையின் வளாகத்தில் சுமார் 2 ஹெக்டேர் நிலப்பரப்பில் கொட்டப்பட்டு இது வரை அகற்றப்படாமல் உள்ளது. இதனால் நிலத்தடிநீர் மாசு அடைவதை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி திடக்கழிவு கொட்டப்பட்டுள்ள பகுதியில் நிலத்தடி நீர் மாசு ஏற்படாமலிருக்க ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் திட்ட அறிக்கை

தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை ரூ.12 கோடி செலவில் செயல்படுத்துவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

- கொடைக்கானலில் உள்ள தி/ள்.ஹிந்துஸ்தான் யூனிலிவர் தொழிற்சாலை வளாகத்தில் பாதரச கழிவினால் பாதிக்கப்பட்ட நிலப்பரப்பினை சீர் செய்யும் பணியினை இந்நிறுவனம் மார்ச் 2021–லிருந்து மேற்கொண்டு வருகின்றது. இப்பணி தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த மார்ச் 2022 வரை 1755 சதுர மீட்டர் நிலப்பரப்பு மண் சீர் செய்யப்பட்டுள்ளது. மீதம் உள்ள 16,097 சதுர மீட்டர் பரப்பளவு நிலப்பரப்பினை மார்ச் 2024–க்குள் சீர் செய்து முடிக்கவேண்டும் என வாரியம் அறிவுறுத்தியுள்ளது.
- சென்னை தண்டையார்பேட்டை பகுதியில் 2013–ஆம் ஆண்டு தி/ள்.பாரத் பெட்ரோலியம்

கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான நிலத்தடி பெட்ரோலிய எண்ணெய் குழாயில் கசிவு ஏற்பட்டு நிலத்தடி நீர் மாசடைந்தது. இதனை சீர் செய்யும் பணியினை மேற்படி நிறுவனம் கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. தற்போது இப்பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவின்படி, இந்த எண்ணெய் கசிவினால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு ஏதேனும் உடல்நல பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் சுகாதார ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**4.6.4. தோல் மற்றும் சாயத் தொழிற்சாலைகளின் பூஜ்ய கழிவுநீர் வெளியேற்றும் அமைப்புகள் மூலம் உருவான கலவை உப்பினை மறு உபயோகம் செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள்**

தமிழ்நாட்டில் வேலூர், இராணிபேட்டை, திருப்பத்தூர், திருச்சி, ஈரோடு, காஞ்சிபுரம், திருவள்ளூர்,

திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள தோல் தொழிற்சாலைகள் மற்றும் திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் அமைந்துள்ள சாயத் தொழிற்சாலைகளுக்கென அமைக்கப்பட்டுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின், பூஜ்ய கழிவுநீர் வெளியேற்றும் அமைப்பிலிருந்து முறையே சுமார் 82,000 டன் மற்றும் 1,09,374.5 டன் வெளியேற்றப்பட்ட கலவை உப்பானது தொழிற்சாலை வளாகங்களில் பாதுகாப்பாக சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

தோல் தொழிற்சாலைகளிலில் உள்ள பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட கலவை உப்பிலிருந்து சோடியம் குளோரைடு உப்பினை பிரித்தெடுத்து, உரத்தொழிற்சாலைகள் சோதனை முறையில் பயன்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் 03.08.2017–ம் நாளிட்ட கடிதத்தில், சாயத் தொழிற்சாலைகளிலிருந்து

வெளியேற்றப்பட்டு, சேமிக்கப்பட்ட கலவை உப்பினை தொழிற்சாலைகளின் உபயோகத்திற்கு சுத்திகரிப்பு செய்யும் பொருட்டு, நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யத்தில் உள்ள ஒரு தொழிற்சாலைக்கு சோதனை ஓட்டம் நடத்த ஒப்புதல் அளித்துள்ளது. இதனை தொடர்ந்து, ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தியாகும் அடர்கலவை உப்பை சுத்திகரித்து தொழிற்சாலைகள் பயன்படுத்தும் வகையில் நிலைத்தகு செயல்முறைகள் (Standard Operating Procedures) 2021, ஜூன் மாதம் வழங்கப்பட்டுள்ளது. இதனை செயல் படுத்த வாரியம் முனைப்புடன் செயல் பட்டு வருகிறது.

**4..6.5 ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஸ்டுடியோ**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஸ்டுடியோவை நிறுவ நடவடிக்கைகள் எடுத்து

வருகிறது. தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் மருத்துவக் கழிவுகள் கொண்டுசெல்லும் வழிதடங்களை கண்காணிப்பதற்காக உருவாக்கப்படும் கழிவு மேலாண்மைப் பிரிவு, இணையவழி இசைவாணை மேலாண்மை, காற்று தரக் கண்காணிப்பு மையம், நீர் தரக் கண்காணிப்பு மையம், இணையவழி சட்ட வழக்கு கண்காணிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பு (OLMMS), இணையவழி குறைகள் மனு நிவர்த்தி அமைப்பு (OLGPRS) ஆகியவை ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஸ்டுடியோவில், ஒரே கூரையின் கீழ் அமைக்கப்பட உள்ளன.

**5.0. சட்ட செயலாக்க அமைப்பு**

சுற்றுச்சூழல் சட்டங்களை மீறும் தொழிற்சாலைகள் மீது, சுற்றுச்சூழல் சட்டங்களின் கீழ் புகார்கள் பதிவு செய்யவும் மேலும் தொழிற்சாலைகளை மூடுவதற்கும், மின் இணைப்பை

துண்டிப்பதற்கும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அதிகாரம் உள்ளது.

### 5.1. மேல்முறையீட்டு ஆணையம்

மேல் முறையீட்டு ஆணையம் (Appellate Authority), 2000–ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எந்தவொரு நபரும்/ தொழிற்சாலையும் மேற்கூறிய ஆணையத்திடம் மேல்முறையீடு செய்யலாம்.

### 5.2. தேசிய பசுமைத் தீர்ப்பாயம்

தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென் மண்டலம் 2012–ம் ஆண்டிலிருந்து சென்னையில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் / மாநில அரசு / மேல்முறையீட்டு ஆணையத்தால் வழங்கப்படும் உத்தரவை எதிர்த்து எந்த ஒரு நபரும், உத்தரவு பிறப்பித்த 30 நாட்களுக்குள் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம். தேசிய

பசுமைத் தீர்ப்பாயத்தின் வழக்குகளை கண்காணிப்பதற்கு வாரியம் தற்போது மென்பொருள் அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது.

## 5.3. இணையவழி சட்ட வழக்கு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், உச்ச நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு, தேசிய பசுமைத் தீர்ப்பாயம், மேல் முறையீட்டு ஆணையம் ஆகிய நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை கண்காணிப்பு / தொடர் கண்காணிப்பு செய்வதற்கு இணைய வழி அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது.

## 6.0. இதர செயல்பாடுகள்

## 6.1. மாசிலாப் பயணநாள் (ECOmmute Day)

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அனைத்து புதன்கிழமைகளிலும் மாசிலாப் பயணநாளைக் கடைபிடித்து மற்ற அரசு அமைப்புகளுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் முன்மாதிரியாகச் செயல்படுகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனைத்து ஊழியர்களும் புதன்கிழமைகளில் அவர்களது வீட்டிலிருந்து அலுவலகத்திற்கும், அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கும் மாசில்லாத போக்குவரத்து அல்லது பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துகிறார்கள். இதனால் உந்தப்பெற்ற பல மாவட்ட ஆட்சித்தலைவர்களும், தனியார் தொழிற்சாலைகளும் இம்மாசிலாப் பயணநாளைக் கடைபிடித்து வருகிறார்கள். இது மக்கள் இயக்கமாக மாறும் போது இதனால் பொருளாதாரம், நலவாழ்வு மற்றும் சுற்றுச்சூழலில் ஏற்படும் பயன்கள் தெளிவாக புலப்படும்.

## 6.2. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது. இப்பயிற்சி நிலையத்தின் மூலம் வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலை பிரதிநிதிகள், நகராட்சி மற்றும்

மாநகராட்சி நிர்வாகிகள், அரசுத் துறைகள், அரசு சாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து பயிற்சிகளை அளித்து வருகிறது.

**6.3. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நேர்மறையான நடவடிக்கைகள் மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் பல்வேறு வகையான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வாரியம் ஒவ்வொரு ஆண்டும் பேரணிகள், ஆட்டோ ரிக்ஷா மூலம் பரப்புரைகள், சுற்றுச்சூழல் வினாடிவினா, மரக்கன்றுகளை பொது இடங்களில் நடுதல், துண்டு அறிக்கை வழங்குதல், காட்சிப் பலகைகள், வானொலி பண்பலைகள் மூலம் பரப்புரைகள், விழிப்புணர்வு குறித்த குறும்படங்களை ஊடகங்களில் திரையிடுதல் போன்ற பல வழிகளில் மேற்கொண்டு வருகிறது. கூடுதலாக தீபாவளி மற்றும் போகி பண்டிகைகளின் போது சிறப்பு காற்று தர

ஆய்வுகளை நடத்தி காற்றின் தரத்தினை அளவிட்டு அதன் முடிவுகளை வெளியிட்டு வருகிறது. மேலும், வாரியம் விநாயகர் சதுர்த்தியின் போது சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பதற்கு முன்னும் பின்னும், நீரின் தரத்தை ஆய்வு செய்து அதன் முடிவுகளை ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பி வருகின்றது.

## 6.4. இணையவழி குறைகள் மனு நிவர்த்தி (OLGPRS) அமைப்பு

சுற்றுச்சூழல் சார்ந்த பொதுமக்களின் புகார் மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணும் விதமாக, வாரியம் இணையவழி குறை தீர்வு அமைப்பை உருவாக்கியுள்ளது. வாரியத்தின் செயல்பாடுகள் வெளிப்படைத் தன்மையுடன் இருக்கும் பொருட்டும், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் பொருட்டும், ஒவ்வொரு மாதமும் 5–ம் தேதி "நேரடி கருத்துக்கேட்பு அமர்வு" (Open House Session) வாரிய அலுவலகங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

## 7.0. 2021–2022 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள்

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தற்பொழுது சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகளின் இயக்கத்திற்கான இசைவாணையை ஒவ்வொரு ஆண்டும் வழங்குவதற்குப் பதிலாக அரசின் எளிதான வணிக கொள்கையின் படி தொகுப்பாக வழங்குகிறது.

- சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்த பங்களிப்பை வழங்கிய 100 தனிநபர் / நிறுவனங்கள் / தொழிற்சாலைகளுக்கு ரூ.1 லட்சத்துடன் கூடிய பசுமை முன்னோடி (பசுமை சாம்பியன்) விருதுகளை மாவட்ட ஆட்சியர்களின் மூலம் ரூபாய் 1 கோடி செலவில் ஒவ்வொரு வருடமும் ஜூன் 5–ஆம் தேதி வழங்க தமிழ்நாடு மாசு

கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

- அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகள் மற்றும் அதிகமாக பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் கண்காணிப்பை துரிதப்படுத்துவதற்காகவும் மற்றும் புகார்களின் மீதான ஆய்வு நடவடிக்கைகளை விரைந்து எடுப்பதற்காகவும், ரூ.2.55 கோடியில் மூன்று உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் மணலி, மேட்டூர் மற்றும் ராணிப்பேட்டையில் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

- சென்னை, வேலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் நகராட்சி மற்றும் தொழிற் கழிவு நீர் மற்றும் திடக்கழிவுகள் நீர்நிலைகளில் வெளியேற்றப்படாமல்

இருப்பதை முனைப்புடன் கண்காணிப்பதற்காக, பறக்கும் படைகளை ரூ.1.72 கோடியில் உருவாக்க உத்தேசிக்கப்பட்டது. தற்போது இவ்வலுவலகங்கள் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

- கடலூர் சிப்காட்டில் அமைந்துள்ள இராசயன தொழிற்சாலைகளையும், நெய்வேலியில் அமைந்துள்ள அனல் மின் நிலையங்களையும் மிகத் தீவிரமாக கண்காணிப்பதற்காக கடலூரில் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகம் ரூபாய் 5 கோடி செலவில் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

- முக்கிய ஆறுகளின் நீரின் தரத்தை கண்காணிப்பதற்காக நிரந்தர நீர் தர

கண்காணிப்பு நிலையங்களை ரூ.2.0 கோடி செலவில் படிப்படியாக மூன்று ஆண்டுகளுக்குள் நிறுவவும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிகழ்நேர அடிப்படையில் கண்காணிப்பதற்காகவும் வாரியம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், தாமிரபரணி ஆற்றில் மூன்று நிகழ்நேர நீர்தர கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கவும், மற்ற ஆறுகளில் நீர் மாதிரிகள் சேகரிப்பதற்கான அமைப்புகளை ஏற்படுத்தவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- இணையதள இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு, இணையவழி குறைகள் மனு நிவர்த்தி அமைப்பு, தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு அமைப்பு, இணையதள நீர் தர கண்காணிப்பு, தொடர் சுற்றுப்புற நீர் தர கண்காணிப்பு அமைப்பு,

மருத்துவக் கழிவுகள் கொண்டுசெல்லும் வழிதடங்களை கண்காணிப்பதற்காக உருவாக்கப்படும் கழிவு மேலாண்மைப் பிரிவு, இணையதள சட்ட வழக்கு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு, இணையதள தீங்கு விளைவிக்கும் கழிவுகள் கண்காணிப்பு போன்ற பல்வேறு தகவல் தொழில் நுட்ப பயன்பாடுகளை பராமரிப்பதற்காக தமிழ்நாடு மின் ஆளுமைக் கொள்கையின் படி தகவல் தொழில் நுட்ப பிரிவு ரூ.7.5 கோடி செலவில் உருவாக்க உத்தேசிக்கப்பட்டது. தற்போது இவ்வலுவலகம் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு செயலரங்கினை ரூ.64 கோடியில் நிறுவ நடவடிக்கைகள் எடுத்து

வருகிறது. அனைத்து விதமான இணையவழி இசைவாணைகள், ஏற்பாணைகள், காற்று தர கண்காணிப்பு மையம், நீர் தர கண்காணிப்பு மையம் தீங்குவிளைக்கும் கழிவுகள் மற்றும் மருத்துவ கழிவுகள் கண்காணிப்பு, புவிசார் தகவல் மையம் இணைய தள சட்ட வழக்கு மேலாண்மை மற்றும் நிகழ்நேர காற்று தர முன்னெச்சரிக்கை ஆகியவை ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஸ்டுடியோவில், ஒரே கூரையின் கீழ் அமைக்கப்பட உள்ளன.

- சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் பசுமைப் பூங்கா ஒன்றினை ரூ.2.0 கோடியில் ஏற்படுத்த சென்னை பெருநகர மாநகராட்சி மூலம் வாரியம் முயற்சி எடுத்து வருகிறது.

- வாரிய அலுவலகங்கள் மற்றும் ஆய்வகங்களின் பயன்பாட்டிற்காக ரூ.7.5 கோடியில் 50 வாகனங்களை வாங்கும் பணியினை வாரியம் மேற்கொண்டு வருகிறது.

- வாகனங்களில் எரிபொருள் பயன்பாட்டிற்கான எத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஏதுவாக, நீர்நிலைகளுக்கு அருகில் உள்ள இடங்களில் ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளில் எத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான தடையை அரசு தளர்த்தியுள்ளது.

## 8.0. நிலையான வளர்ச்சி இலக்குகள்

உலக அளவில் வறுமையை ஒழித்து, பூமியை பாதுகாத்து அனைத்து மக்களும் அமைதியுடனும், வளமுடனும் வாழ்வதற்காக நாடுகளுக்கிடையேயான

ஒப்பந்தப்படி பன்னாட்டு வளர்ச்சி சார்ந்த குறிக்கோள்களை அடைவதே நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள் ஆகும். செப்டம்பர் 2015–ல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் உச்சி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களை இந்த நிலையான வளர்ச்சி இலக்குகள் கொண்டுள்ளது. வரும் 2030–ஆம் ஆண்டிற்குள் இந்த குறிக்கோள்களை அடைவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு தொடர்புடைய குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் குறியீடுகள், பின்வருமாறு:

**இலக்கு–6:** "தூய நீர் மற்றும் துப்புரவு" – கீழ் உருவாக்கப்பட்ட குறிக்கோள் 6.3–ன் படி, 2030–ஆம் ஆண்டிற்குள் உலகளவில் நீரின் தரத்தினை உயர்த்துவதற்காக, நீர் மாசினைக் குறைத்தல், கழிவுகள் கொட்டப்படுவதைத் தவிர்த்தல், தீங்கு விளைவிக்கும்

கழிவுகள் வெளியேற்றத்தைக் குறைத்தல், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வெளியேற்றத்தை பாதியாகக் குறைத்தல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

செயல்பாட்டு குழு–2; "ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம்" என்ற நோக்கத்தின் கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்த இலக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் நேரடியாக இணைக்கப்படாத ஒன்றாக இருப்பினும், கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்து வெளியேற்றும் தொழிற்சாலைகளின் சதவீதம் 6.3.2 என்ற குறியீடு மூலம் மறைமுகத் தொடர்புடையதாக உள்ளது.

மேலும், இந்த குறியீடு, தேசிய அளவில், தேசிய குறியீடு கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகள்– இந்தியா குறியீடு 2.0 (2019)–ன் கீழ் இந்த குறியீட்டிற்கான மதிப்பீடு 99.1 மற்றும் மதிப்பெண் 98 ஆகும்.

நிலையான வளர்ச்சி இலக்குகள் இந்தியா குறியீடு 3.0 (2020)–ன் கீழ் இந்த குறியீட்டிற்கான மதிப்பீடு 98.23 மற்றும் மதிப்பெண் 96 ஆகும். மாநிலத்தில் அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள், கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்து, "கழிவுநீர் வெளியேற்றம் (Zero Liquid Discharge) இன்மை" நிலையை அடைய வேண்டுமென வாரியம் வலியுறுத்தியுள்ளது. இம்முயற்சியின் விளைவாக, நாள் ஒன்றுக்கு 87 மில்லியன் லிட்டர் அளவில் நீர் ஆதாரங்களிலிருந்து தொழிற்சாலைப் பயன்பாட்டிற்காக நீர் எடுப்பது குறைக்கப்பட்டுள்ளது.

**இலக்கு–9**: "தொழிற்சாலைகளில் புதுமை மற்றும் சிறந்த உள்கட்டமைப்பு" – கீழ் வகுக்கப்பட்ட குறிக்கோள் 9.2–ன் படி, இயைந்த மற்றும் நிலைத்தகு தொழில் மயமாக்குதல் என்ற குறிக்கோளை முன்வைத்து 2030–ம் ஆண்டிற்குள் தேசிய சூழ்நிலைகளுக்கேற்ப வேலைவாய்ப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழிற்சாலைகளின் பங்களிப்பினை குறிப்பிடத்தக்க அளவில் உயர்த்துதல்

மற்றும் வளர்ச்சி மிகக் குன்றிய நாடுகளில் தொழிற்சாலைகளின் பங்களிப்பினை இரட்டிப்பாக்கல் ஆகியவற்றை செயலாக்க வேண்டும்.

செயல்பாட்டுக் குழு–5: "புதுமை, தொழில் மயமாக்கல் மற்றும் நிலையான வளர்ச்சி"–ன் கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்த இலக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் நேரடியாகத் தொடர்பற்றதாக இருப்பினும், 2.5 மைக்ரான் அளவிற்கு மேல் உள்ள நுண்துகள்களின் அளவு, எத்தனை இடங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக உள்ளது என்ற 9.2.3 குறியீடு மூலம் மறைமுகமாக தொடர்புடையதாக உள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுப்புற காற்று தரத்தினை மாவட்ட தலைநகரங்கள் மற்றும் முக்கிய தொழிற்சாலை பகுதிகளை உள்ளடக்கிய 87 இடங்களில் கண்காணித்து வருகிறது. இதுதவிர காற்றின் தரத்தினை பெருநகரங்கள், நகர்புறங்கள்

மற்றும் ஊரக பகுதிகளில் கண்காணிக்கும் வண்ணம், வாரியம் இன்னும் 25 தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை 2022–2023–ம் ஆண்டில் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. நுண்துகள்கள் அளவீட்டின் அடிப்படையில், நான்கு நகரங்கள், காற்று தரத்தினை அடையாத நகரங்களாக உள்ளன. காற்றின் தரத்தினை இந்த நகரங்களில் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த குறியீடு மாநில அளவில், மாநில குறியீடு கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**இலக்கு–12:** 'வளங்களை பொறுப்பான முறையில் நுகர்தல் மற்றும் உற்பத்தி செய்தல்' என்ற நோக்கத்தின் கீழ் வகுக்கப்பட்ட குறிக்கோள் 12.4–ன் படி, 2020 ஆம் ஆண்டிற்குள் வேதிப்பொருட்கள் மற்றும் அனைத்து கழிவுகளையும் பன்னாட்டு சட்ட அமைப்புக்குள் சுற்றுச்சூழலைப் பாதிக்காத வண்ணம் மேலாண்மை செய்யவும், கழிவுகளை அவற்றின் வாழ்நாள் சுழற்சி முழுக்க சுற்றுச்சூழல் பாதிக்காமல் மேலாண்மை

செய்யவும், கழிவுகள் காற்று, நீர், நிலம் ஆகியவற்றில் வெளியேற்றப்படுவதை குறிப்பிடத்தக்க அளவில் குறைத்து சுற்றுச்சூழல் மற்றும் மக்கள் நலனில் ஏற்படும் பாதிப்பினைக் குறைத்தல் ஆகியவை இதன் நோக்கமாகும்.

செயல்பாட்டுக் குழு–6: "நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி"–ன் கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்த இலக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் தொடர்பற்றதாக இருப்பினும், மாநிலம் முழுவதும் கண்காணிக்கும் நிலையங்களை அமைத்து சுற்றுப்புறத் தரத்தினை கண்காணித்தல் 12.4.2 குறியீடு மூலம் மறைமுகத் தொடர்புடையதாக உள்ளது. தமிழ்நாட்டில், உள்நாட்டு நீர் நிலைகளின் தரத்தினை 143 இடங்களிலும், நிலத்தடி நீரின் தரத்தினை 22 இடங்களிலும், கடலோர நீர் தரத்தினை 34 இடங்களிலும் மற்றும் சுற்றுப்புற காற்று தரத்தினை 87 இடங்களிலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது. சென்னை நகரில், சுற்றுப்புற

ஒலி அளவு 10 இடங்களில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதன் தரவுகள் வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

**இலக்கு–13:** 'காலநிலை நடவடிக்கை' – கீழ் வகுக்கப்பட்ட குறிக்கோள் 13.3–ன் படி பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துதல், மாற்றத்தை உள்வாங்குதல், தாக்கத்தை குறைத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை செய்தல் ஆகியவை குறித்த கல்வி அறிவினை மேம்படுத்துதல், விழிப்புணர்வை அதிகரித்தல், தனிநபர் மற்றும் நிறுவனங்களின் திறனை உயர்த்துதலாகும்.

செயல்பாட்டு குழு–7: "நிலையான சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்"– கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது. மாநிலத்தில் காலநிலை மாற்ற நடவடிக்கைகளை தழுவ, தாக்கத்தை குறைக்க மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்த, நிறுவனங்கள் மற்றும்

தனிநபர்களின் திறன்களை வலுப்படுத்துதல் என்ற 13.3.2 குறியீடு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் மூலம் பயிற்சி நிகழ்ச்சிகளையும் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறது.

2021 – 22 ஆம் ஆண்டில் மொத்தம் 10 பயிற்சி நிகழ்ச்சிகள் வாரியத்தின் சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் மூலம் நடத்தப்பட்டுள்ளன. மேலும் இதர பயிற்சி நிறுவனங்களில் நடத்தப்பட்ட 5 பயிற்சி நிகழ்ச்சிகளில் வாரிய அலுவலர்கள் பங்கெடுத்துள்ளனர். மேலும் 2021 –22 ஆம் ஆண்டில், 197 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தமிழ்நாடு முழுவதும் பண்டிகை காலங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களால் நடத்தப்பட்டன.

"வாராந்திர மாசிலா அலுவலகப் பயண நாள் (ECOmmute Day)" ஒவ்வொரு புதன் கிழமையும் வாரிய அலுவலர்கள் அவர்கள் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு பொது போக்குவரத்து அல்லது மாசு ஏற்படுத்தாத வாகனங்களில் வருவதைக் கடைபிடித்து வருகிறார்கள். இதனால், எரிபொருட்களால் இயங்கும் தனிநபர் / வாரிய வாகனங்களை பயன்படுத்தி அலுவலகத்திற்கு வந்து செல்வது அனைத்து அலுவலர்களாலும் தவிர்க்கப்பட்டுள்ளது. பல மாவட்ட ஆட்சியர்கள், தங்கள் மாவட்டங்களில் மாசிலாப் பயண நாளினைக் கடைபிடிக்கத் தொடங்கியுள்ளனர். இதனைக் கடைபிடிக்குமாறு மற்ற அரசாங்க துறைகளையும் வாரியம் கோரியுள்ளது.

மாசிலாப் பயணக் கருத்து பள்ளி மாணவர்களிடையேயும் ஊக்குவிக்கப்படுகிறது. வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்ட அளவுகோலின்படி இதனை நடைமுறைப்படுத்தும் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாசிலாப் பயணப் பள்ளி என்ற

சான்றிதழையும், பரிசுத்தொகையும் வழங்க வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் இதில் பங்குபெறும் மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**சிவ. வீ. மெய்யநாதன்**
**சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்**




மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23.12.2021 அன்று துவக்கி வைத்தார்




மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தினை துவக்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றல்




மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு பிரச்சார துவக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப்பொருட்களை காட்சிப்படுத்தும் அரங்கினை பார்வையிடல்




மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு
பிரச்சார விளம்பரம்



திருப்பூரில் உள்ள சாய தொழிற்சாலைகளுக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பன்முறை ஆவியாக்கும் அமைப்பு மற்றும் அதிலிருந்து பெறப்பட்ட உப்பு.



திருப்பூரில் உள்ள சாய தொழிற்சாலைக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் வான்வழி காட்சி



மதுரையில் நடைபெற்ற மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம்



ஈரோட்டில் உள்ள ஒரு கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள அன்றாட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் வான்வழிகாட்சி



சென்னையில் உள்ள வாரிய மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் உள்ள அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோமீட்டர்




நடமாடும் சுற்றுப்புற காற்று தொடர் கண்காணிப்பு நிலையம்




பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பாட்டில்களை மறுசுழற்சி செய்வதற்கான சேகரிக்கும் இயந்திரம்



ஒரகடத்தில் உள்ள தொழிற்சாலையில் மின்னணு கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு ஏதுவாக பிரித்தெடுத்தல்



கும்மிடிப்பூண்டியில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை பாதுகாப்பான முறையில் கையாளும் பொது வசதி அமைப்பில் உள்ள கழிவுகள் நிலநிரப்பு மூலமாக மூடப்படும் காட்சி.




திருப்பூரில் உள்ள சாய தொழிற்சாலைகளுக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள கழிவு நீரினை ஆவியாக்கும் மற்றும் உப்பு படிகமாக்கும் அமைப்புகள்.





ஈரோடு மாவட்டத்தில் மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு பிரச்சாரம்



நீலக்கொடி கடற்கரை திட்டம்




கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை - 2011




கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை - 2011-ன் முப்பரிமாண காட்சி



தேசிய பசுமை படை மாணவிகள் மரம் நடுதல்.




பசுமை திறன் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நுட்பங்களைப் பயன்படுத்தி வனவிலங்கு மேலாண்மை சான்றிதழ் படிப்பு



அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.